


# தமிழர் மரபு - தமிழரும் தொழில்நுட்பமும்

## தொகுதி – 1

முனைவர் த. மகேஸ்வரி






9 788196 341350

# தமிழர் மரபு - தமிழரும் தொழில்நுட்பமும்

தொகுதி - 1

முனைவர் த. மகேஸ்வரி

# Title Verso

**TITLE OF THE BOOK**: **Tamil Heritage - Tamils and Technology - 1**

**புத்தகத்தலைப்பு: தமிழர் மரபு - தமிழரும் தொழில்நுட்பமும்**

**EDITORS** : **Dr. D. Maheswari**

**தொகுப்பாசிரியர்** : **முனைவர் த. மகேஸ்வரி**

**FIRST EDITION** : 2023

**முதல் பதிப்பு** : 2023

**PAGES / பக்கங்கள்** : 80

**PRICE/ விலை** : 350

**ISBN NUMBER** : 978-81-963413-5-0

PUBLISHER : Pandian Educational Trust,
3/350, Veterinary Hospital Backside,
Virudhunagar – 626001.
Tamil Nadu

PRINTER : Maheswari Publishers,
3/350, Veterinary Hospital Rear side,
Virudhunagar – 626001.
Tamil Nadu

**பதிப்புரிமை/Copyright © 2023 – கட்டுரையாளர்களுக்கு /Authors'**

அனைத்து பதிப்புரிமையும் பெறப்பட்டுள்ளது.

இப்புத்தகத்தின் எப்பகுதியும் பதிப்பகத்தின் அனுமதியின்றி அச்சிடப்படக்கூடாது.

All rights reserved. No part of this book should be transmitted to any type of printed material without proper permission from the publisher.

# முன்னுரை

**தமிழர் மரபு - தமிழரும் தொழில்நுட்பமும்** எனும் புத்தகம் தமிழ் மக்களின் வளமான கலாச்சாரப் பாரம்பரியம் மற்றும் தொழில்நுட்பத் துறையில் அவர்களின் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளின் ஆய்வு ஆகும். இத்தலைப்பு நமது பெருமை மிகு அண்ணா பல்கலைக்கழகம் தமிழுக்காக முதலாம் ஆண்டில் இரு பாடத்திட்டத்தைப் பொறியியல் கல்லூரிகளில் இணைத்து இருப்பதற்குத் துணைசெய்யும் விதமாகச் சிறந்த கட்டுரைகளை உருவாக்க உருவானதாகும். இந்த தொகுப்பு தமிழ்ச் சமூகத்தின் குறிப்பிடத்தக்க சாதனைகளைக் கொண்டாடுவது மட்டுமல்லாமல், அவர்களின் நெகிழ்ச்சி, படைப்பாற்றல் மற்றும் அசைக்க முடியாத மனப்பான்மைக்குச் சான்றாகவும் விளங்குகிறது.

இந்தியாவின் தென் மாநிலமான தமிழ்நாடு ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகச் செழித்து வளர்ந்த துடிப்பான நாகரிகங்களின் தொட்டிலாக உள்ளது. பழங்காலத்திலிருந்தே ஒரு வரலாற்றைக் கொண்டு தமிழர்கள் பல்வேறு களங்களில், குறிப்பாக தொழில்நுட்ப உலகில் அழியாத முத்திரைகளைப் பதித்துள்ளனர். தசம அமைப்பின் கண்டுபிடிப்பு முதல் மருத்துவ அறிவியல் மற்றும் வானியல் பங்களிப்புகள் வரை தமிழ் அறிஞர்கள், இன்று நாம் வாழும்

உலகை வடிவமைக்கும் முன்னோடி முன்னேற்றங்களில் முன்னணியில் உள்ளனர். இந்த புத்தகத்தின் மூலம் பிரபஞ்சத்தின் மர்மங்களை அவிழ்க்க தங்கள் அறிவாற்றலையும் ஆர்வத் தன்மையையும் பயன்படுத்திய தமிழ் முன்னோர்களின் அடிச்சுவடுகளைத் தேடி, காலத்தின் மூலம் ஒரு குறிப்பிடத்தக்கப் பயணத்தைத் தொடங்குகிறோம்.

பண்டைய தமிழ் பொறியியல் மற்றும் கட்டிடக் கலையின் நுணுக்கங்களை வெளிப்படுத்தும் அற்புதமான சோழர் கோவில்களில் இருந்து, சங்க காலத்தின் கணித புத்திசாலித்தனம் வரை, அறிவார்ந்த ரீதியாக அழகாக இருப்பது போல் ஒரு பாரம்பரியத்தை நாம் காண்கிறோம். இந்நூலின் அத்தியாயங்களை ஆழமாகப் படிக்கும்போது, பல்வேறு துறைகளில் பங்களிப்புச் செய்த தமிழர்களின் வியக்க வைக்கும் தொழில்நுட்பப் புத்திசாலித்தனத்தைக் கண்டறிய முடிகிறது.

விவசாய நிலப்பரப்பை மாற்றியமைத்த நீர்ப்பாசன முறைகளின் வளர்ச்சியிலிருந்து ஜவுளி, உலோகம் மற்றும் இலக்கியத் துறையில் குறிப்பிடத்தக்க சாதனைகள் வரை, தமிழ் மக்கள் தொழில்நுட்ப வரலாற்றில் அழியாத முத்திரையைப் பதித்துள்ளனர். மேலும், இந்நூல் தமிழர்களின் கடந்தகாலப் பெருமைகளை மட்டும் மையப்படுத்தாமல், உலகெங்கிலும் உள்ள துடிப்பான மற்றும் ஆற்றல்மிக்க தமிழ்ச் சமூகத்தின்

இன்றைய சாதனைகளையும் எடுத்துக்காட்டுகிறது. தமிழ்நாட்டின் பரபரப்பான தகவல் தொழில்நுட்ப மையங்கள் வரை, தமிழ் மனங்கள் மீண்டும் எல்லைகளைத் தள்ளி 21ஆம் நூற்றாண்டின் தொழில்நுட்ப நிலப்பரப்பை வடிவமைக்கும் நவீன தொழில்நுட்பத்தின் பகுதிகளுக்குள் நாம் நுழைகிறோம்.

தமிழ் பாரம்பரியத்தின் இந்த பொக்கிஷத்தை உன்னிப்பாகக் கட்டமைத்த கட்டுரை ஆசிரியர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களின் முயற்சி பாராட்டுக்குரியது. தமிழ் தொழில்நுட்பத்தின் ஆற்றலை எடுத்துரைப்பதில் அவர்களின் ஆர்வமும் அர்ப்பணிப்பும் இந்தக் கட்டுரைகளின் விரிவான ஆய்வுகளில் தெளிவாகத் தெரிகிறது.

**தமிழர் மரபு - தமிழரும் தொழில்நுட்பமும்** எனும் இப்புத்தகம் கடந்த காலத்திற்கான அடையாளம் மட்டுமல்ல, எதிர்கால சந்ததியினர் தங்கள் கலாச்சாரப் பாரம்பரியத்தைத் தழுவி, நாளைய தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளை வடிவமைப்பதில் தொடர்ந்து பாடுபடுவதற்கான அழைப்பு. இளம் மனங்களை ஊக்குவிக்கும், தமிழ் பாரம்பரியத்தின் மீதான பெருமையை மீண்டும் எழுப்பும் இந்நூல். மேலும், இப்புத்தகத்தின் அனைத்துக் கட்டுரைகளும் நாட்டின் தோற்றம் எதுவாக இருந்தாலும் ஒவ்வொரு கலாச்சாரமும் தொழில்நுட்ப உலகிற்கு மதிப்புமிக்க பங்களிப்பை வழங்குகிறது என்பதை நினைவூட்டுவதாக அமையும்.

**தமிழர் மரபு - தமிழரும் தொழில்நுட்பமும்** எனும் இப்புத்தகம் அனைவருக்கும் வழிகாட்டும் ஒளியாக விளங்கும். நமது பாரம்பரியத்தில் உள்ள செழுமையையும் புத்திசாலித் தனத்தையும் நினைவூட்டும். மேலும், தமிழ் மக்களின் பாரம்பரியத்தைப் பாதுகாக்கவும் கொண்டாடவும் என்றென்றும் நம்மை ஊக்குவிக்கும். அதன் பொருட்டு இந்த தொடர்வரிசை புத்தகப் படைப்பின் முதல் புத்தகத்தை உங்களுக்கு அளிப்பதில் பெருமிதம் அடைகிறோம்.

**மகேஸ்வரி பதிப்பகம்**

## உள்ளடக்கம்


| வ. எண் | தலைப்பு | ப. எண் |
|---|---|---|
| 1. | நிலையும் நிலைப்பலகையும்<br>செ. உமாதேவி | 1 - 13 |
| 2. | அகநானூறு – நெய்தல் திணையில் காணலாகும் வணிகச் சிந்தனைகள்<br>முனைவர் செ. சாந்தி | 14 - 30 |
| 3. | சங்க இலக்கியங்களில் நீர்ப்பாசன தொழில்நுட்பம்<br>முனைவர் பா. தமிழரசி | 31 - 51 |
| 4. | தமிழர்களின் மாண்பும் அயலகத் தொடர்பும்<br>முனைவர் க. புவனேஸ்வரி | 52 - 61 |
| 5. | பக்தி இயக்கத்தில் ஆழ்வார்கள்<br>பொன். கனகா | 62 - 78 |

# நிலையும் நிலைப்பலகையும்

**செ. உமாதேவி**, தமிழ்த் துறை, வே.வ. வன்னியப்
பெருமாள்பெண்கள் கல்லூரி, விருதுநகர்.

## முன்னுரை

கட்டிடம் என்ற சொல்லை கட்டிடக்கலை என்று கூறும் போது மேலும் பொருள் பொதிந்த சொல்லாக காண முடிகிறது. ‘கலை’ என்ற சொல் இன்பம், அழகு, உயர்வு எனும் பொருளைத் தாண்டி உயிர், மேம்பட்ட வாழ்வு என்ற உயர்ந்த பொருளைத் தருகிறது. கலை என்பதனை ஒன்றின் நுண்ணறிவு சார்ந்த வெளிப்பாடாகவே நம் முன்னோர்கள் கண்டுள்ளனர். இவ் உயரிய வெளிப்பாடு மனிதனின் அறிவைப் புலப்படுத்துவதாகவும், மேலும் வாழ்வில் உயர்த்துவதாகவும் அமைகிறது. அவ்வகையில் வீட்டின் நிலைக் கதவின் மேல் நிலைப்பாக, முத்தாய்ப்பாக, வரவேற்கும் விதமாக, வீட்டினரின் நல் உணர்வாக, அடையாளமாக அமைந்திருப்பது நிலைப்பலகை ஆகும். இந்த நிலை மற்றும் நிலைப்பலகையின் அமைப்பும் பயன்பாடும் இங்கு உற்று நோக்கப்படுகிறது.

## கட்டுரையின் நோக்கம்

நம் பண்டையத் தமிழ் மரபில் வீடுகளுக்கு அமைக்கும் தலைவாசலும், அதனைப் பொருத்தியிருக்கும்

 **ISBN Number: 978-81-963413-5-0**

நிலையும், நிலையின் மீது அமைக்கப்பட்ட நிலைப்பட்டியும் அமைந்திருக்கின்ற தன்மையும், நிலைப்பட்டியில் இடம்பெற்ற உருவப்படங்களின் பாங்கு, அவற்றிற்கு நம் முன்னோர்கள் அளித்த முக்கியத்துவம் ஆகியனவற்றோடு வீடும் வீட்டின் நிலைப்பகுதியும் கோவிலுக்கும், இறையருளுக்கும் நிகரானது எனும் தன்மை மற்றும் இதற்கான ஆன்மீகம் சார்ந்த பார்வை ஆகியவற்றையும் கண்டு உரைப்பது நோக்கமாகும்.

நிலைப்பலகையின் தன்மைகள் நாம் வசிக்கும் வீட்டின் தலைப்பகுதியாகவும் உள்பகுதி, வெளிப்பகுதி இரண்டிற்கும் இடைப்பட்ட பகுதியாகவும் திகழ்வது நிலைப்பகுதியாகும். அதாவது தலைவாசல் பகுதியாகும். இப்பகுதி வீட்டின் வரவேற்பிடமாகவும் மக்களின் மன உணர்வு சார்ந்த எண்ணங்களின் தன்மைகளை நல்ல விதமாக வெளிப்படுத்தும் (அமைக்கும்) இடமாகவும் அமைகிறது. இதனைப் பெரும்பாலும் கிழக்கு, வடக்கு ஆகிய திசைகளை நோக்கி அமைப்பது சிறப்பு என்பர். பெரும்பாலான மக்கள் தங்கள் வீட்டில் நிலைகளைக் கிழக்கு அல்லது வடக்குத் திசை நோக்கியே அமைக்கின்றனர். வீட்டின் தலைப்பகுதியாக இருக்கும் இந்த நிலையின் தலைப் (மேல்) பகுதியில் நிலைப்பட்டி என்பது இடம்பெறுகிறது. நிலையின் நீள, அகல


**ISBN Number: 978-81-963413-5-0**

உயர்த்திற்கு ஏற்ப நிலைப்பட்டியும் அமைக்கப்படுகிறது. நிலையின் நான்கு புறங்களிலும் உத்திராட்சம், மீன், இலை, கொடி, பூக்கள், சுருண்ட வளைவுகள் போன்ற வடிவங்கள் இடம்பெறுகின்றன. நிலைப்பட்டியிலும் இத்தகைய வடிவங்கள் அதன் நான்கு பக்கங்களிலும் இடம்பெறுகின்றன. இல்லாமலும் இருக்கின்றன.

**நிலைப்பலகையில் இடம்பெற்ற உருவங்கள்**

நிலையின் மேற்பகுதியில் இடம்பெறும் நிலைப்பலகை பட்டிப் பலகை, பக்ஷிப்பலகை, கண்ணாடிப் பலகை, Ventilater பலகை, என்ற பெயர்களில் அழைக்கப்படுகிறது. இப்பலகை தேக்கு, வேங்கை, தோதகத்தி ஆகிய மரங்களில் செய்யப்படுகின்றன. இப்பலகையில் பொதுவாக ஆசீர்வாதம் செய்யும் இரண்டு யானைகளுடன் கூடிய கஜலட்சுமி, லட்சுமி, விநாயகர், சரஸ்வதி, காமதேனு, வள்ளி, முருகன், தெய்வானை, நந்தி, திருப்பதி, லட்சுமி விநாயகர், சரஸ்வதி, முருகன் ஆகிய தெய்வ உருவங்களும், தசாவதாரம், கிளி, யாளி, யானை, மான், மயில், கிளி, அன்றில் பறவை, சேவல், கோழி, செடி, கொடிகள், பல்வேறு இலை வடிவங்கள், அழகிய வளைவுகள் போன்ற உருவங்கள் இடம்பெறுகின்றன. ஒவ்வொரு சமுதாயத்தினரும் அவரவர்களுக்கு ஏற்ற சிற்ப வடிவங்களைத் தேர்வு செய்து கொள்கின்றனர். நாடார்,


**ISBN Number: 978-81-963413-5-0**

முதலியார், ரெட்டியார், தேவர், பிராமின் சமூகத்தினர் தாங்கள் தேர்ந்தெடுக்கும் உருவங்களைத் தேக்கு, வேங்கை, மரங்களிலும் மன்னர்கள், ஜமீன்தார் வகையினர்கள் நிலையையும் நிலைப் பட்டியையும், தோதகத்தி மரத்தில் அமைத்து வந்துள்ளனர். சிற்ப வேலைப்பாடுகள் இல்லாமல் நிலைப் பட்டியைக் கூடாகவும் அமைத்துள்ளனர். அதில் வாசலில் பயன்படுத்தக்கூடிய கோலப்பொடி போன்ற பொருட்களையும், பாதுகாப்பிற்கான பொருட்களையும் வைத்துப் பயன்படுத்தி உள்ளனர்.

**நிலைக் கதவின் அமைப்பு**

தற்காலத்தில் நிலைக்கதவு ஒரு கதவாகவும், இரண்டு கதவாகவும் அமைக்கப்படுகின்றது. 200,300 ஆண்டுகளுக்கு முன்பு பெரிய வீடுகளிலும், கல் கட்டிடமாக அமைக்கப்பட்ட வீடுகளிலும் நிலைக்கதவு ஒரே கதவாகக் கனம் (Weight) மிக்கதாக இடம்பெற்றுள்ளது. இக்கதவு பெரும்பாலும் சராசரி மனிதர்கள் செல்லும் அளவிலும், சராசரி மனிதர்கள் வீட்டினுள் செல்லும்போது குனிந்தும், பணிவுடன் செல்ல வேண்டும்படியாக உயரம் குறுகிய அளவிலும் அமைத்துள்ளனர். தேக்கு, வேங்கை, தோதகத்தி ஆகிய மரங்களிலேயே நிலைக் கதவு செய்யப்பட்டுள்ளது. “அக்காலத்தில் கதவில் மேல, கீழ, நடுவுல மூணு


**ISBN Number: 978-81-963413-5-0**

இடத்திலும் மூணு கட்டைகள் இருக்கும் இந்த கட்டைகளை அந்தக் காலத்தில் கம்பங் கட்டைனு சொல்லுவாங்க இந்த மூணு கம்பங் கட்டைகளும் குடும்பம் என்பதையும், அதில் உள்ள உறவுகளையும் குறிக்கின்றன என்பதுதான் ஐதீகம். முக்கியமாகக் கணவன், மனைவி, குழந்தைகளைக் குறிக்கின்றன.

வீடு என்பதற்கு அடையாளமான தலைவாசல் வீட்டின் உறவுகளையும், அவர்களின் ஒற்றுமையையும், குமிழ்கள் குடும்பத்தின் அழகு மற்றும் வலிமையையும் குறிக்கின்றன." (ராஜராஜன்) கதவில் உள்ள இந்த மூன்று கட்டைகளும் அவற்றில் உள்ள குமிழ்களும், கைப்பிடியும், கதவைப் பூட்டுவதற்கு உதவும் தாழ்ப்பாளும் இணைந்தது தான் நிலைக்கதவு ஆகும். இக்கதவில் பிடியாக இருப்பதனைக் 'கதவுக் கைப்பிடி' என்று இக்காலத்தில் குறிப்பிடுகிறோம். இக் கைப்பிடி முற்காலத்தில் நாதங்கி என்று அழைக்கப்பட்டுள்ளது. இப்பெயர் நாதஇசை, நாதசை என்பது நாதங்கி என்று மருவியுள்ளது என்றும் பெரிய கதவுகளில் உள்ள சாவி என்று குறிப்பிடப்படும் திறவுகோலைக் கதவைத் திறப்பதற்காகச் செருகும் இடம் 'சாவிச் சில்லு' என்றும் குறிப்பிடப்படுகிறது என்று பழம்பொருள் சேகரிப்பாளர் திரு.ராஜராஜன் குறிப்பிடுகிறார். இந்தச் சாவிச் சில்லு கதவிற்கு ஏற்பப்

 **ISBN Number: 978-81-963413-5-0**

பெரிய அளவினதாக அதாவது ஏழு அல்லது எட்டு இஞ்ச் அளவு வரை இருந்துள்ளது.

**நிலையும் நிலை வைத்தலும்**

நிலைகள் சாதாரண நிலையாக, சாதாரண உருவங்கள் பொறிக்கப்பட்ட நிலையாக இல்லாமல் இன்றைய காலகட்டத்தில் Showcaseல் மரத்திலும் சுவரிலும் அடுக்கடுக்காக அலங்கார அடுக்குகள் அமைப்பது போன்று மிகப்பெரிய மற்றும் விலைமதிப்பு மிக்க கட்டிடங்களின் தலைவாசல் நிலைகள் மரத்திலேயே அடுக்கடுக்காக அழகாக அமைக்கப்பட்டுள்ளன. இத்தகைய தன்மையுடைய நிலையானது, வாஸ்து சாத்திரத்தின் படி நல்ல நாளில் நல்ல நேரத்தில் பூசை வழிபாட்டுடன் வீட்டில் நுழையும் இடத்தில் நிலை நிறுத்தப்படுகிறது.

தலைவாசல் நிலையினை நன்னாளில், நல்ல நேரம் பார்த்து வீட்டின் முன் பகுதியில் குறிப்பிட்ட இடத்தில் அமைக்கும் போது இறைவனை சன்னிதானத்தில் பிரதிஷ்டை செய்யும் போது இறைவனின் சக்தி பெருகுவதற்கும், அது வழிபடுபவருக்குப் பயன் தருவதற்கும் இறைவனடியில் தங்கமும், நவரத்தினக் கற்களும் வைப்பது போன்று வீட்டில் உள்ள அனைவரும் நலம் பெற்று வாழவும் இங்கு இவை நிலைக்கு அடியிலும் வைக்கப்படுகின்றன.

 **ISBN Number: 978-81-963413-5-0**

மனித வாழ்வு சிறப்புடையதாக உயர்வு உடையதாக இருக்க வேண்டும் என்று முறையாக அமைக்கப்படும் இந்த நிலையின் மீது இறை உருவங்கள் செதுக்கப்பட்ட நிலைப்பட்டி நிலையுடன் இணைந்த நிலையிலும், தனியாகச் செய்து அதனுடன் பொருத்தும் தன்மையிலும் அமைத்துள்ளனர். நாம் வாழ்கின்ற வீடும் கோவில் போல் புனிதமானதாகும். கோவில் மக்களுக்குப் புனிதத்துவத்தையும், மனதிற்கு நிறைவையும், நிம்மதியையும் தரக்கூடிய இடமாகும். இதே தன்மைகளை வீடும் நமக்கு நல்க வேண்டும். 'நீரில்லா நெற்றி பாழ்' என்பது போல் நிம்மதியைத் தராத வீடு. களை இழந்த வீடாகும். அது வாழ்வதற்கு உகந்ததாகாது.

மேலும், நமது உடலின் உள் அமைப்பைப் போன்றே நமது வீட்டையும் வாஸ்து சாஸ்திரத்தின் படி அமைத்துள்ளனர். எனவே நமது முன்னோர்கள் வீடு என்பது நிம்மதி, செல்வம், ஒற்றுமை, எடுத்த செயலில் வெற்றி என அனைத்தையும் தர வல்லது என்பதால் இறைவனின் இருப்பிடம் போல் நமது வீட்டையும் அமைப்பதற்கு வழிகாட்டி உள்ளனர். "கோயில்களில் சிற்பங்கள் வைப்பதால் கோயில்கள் புனிதம் அடைகின்றன. கோயிகளில் இருந்து வரக்கூடிய நேர்மறை சக்திகள் நமக்கு நல் உணர்வைக் கொடுக்கின்றன. அதைப்போலவே வீட்டில் நாம் நேரம்

 **ISBN Number: 978-81-963413-5-0**

காலம் பார்த்து அமைக்கும் நிலையும், நிலைப்பட்டியும் நமக்கு நல்லுணர்வைக் கொடுக்கின்றன. நிலைப் பட்டியால் வீடு புனிதம் அடைகிறது. வீட்டிற்கு வருகின்ற மக்களின் உணர்வுகள் நிலைப்பட்டியின் தெய்வ உருவங்களால் சீர் செய்யப்படுகின்றன. வீட்டுக்குக் கலை அம்சத்தைத் தருகின்றன." (சுந்தர்)

**தமிழரும் பாரம்பரியமும்**

மனிதப் பிறவி எடுத்தவர்கள் அனைவரும் வாழ்வில் முன்னேற்றம் பெறவும், பண்பட்ட நிலையில் வாழவும், பிறவிப் பயனை அடையவும் நம் முன்னோர்கள் பாரம்பரியம் என்பதனை நம்மிடம் வளர்த்து உருவாக்கியுள்ளனர். நமது பாரம்பரியத்தின் உண்மையை உணர்ந்தவர்களே (உள் மையத்தை உணர்ந்தவர்களே, அனுபவத்தில் வல்லவர்களே) உணர்த்தியுள்ளார்கள். பாரம்பரியம் என்பது மனிதனைச் சார்ந்தது; என்றும் மாறாதது; யாரையும் பாதிக்காதது; நீண்ட நெடிய மரபு எனும் பெருமையை உடையது உடல், மனம், உயிர் மூன்றையும் பேணுவதற்கே இத்தகைய மரபுத் தன்மையை உருவாக்கியுள்ளனர். மரபின் பொருளை, அதன் வலிமையை, உண்மையை நாம் தெரியாமலும், அறியாமலும், உரிய விளக்கம் கிடைக்கும்போது அதனை ஏற்காமலும், மதிக்காமலும் சென்று கொண்டிருக்கின்றோம். இதன் விளைவு நம்

 **ISBN Number: 978-81-963413-5-0**

முன்னோர்கள் வழங்கிய பாரம்பரியத்தின் பெருமையையும் ஒன்றின் உள் மையத்தின் பொருளை அறியாமலும், அதிலிருந்து நாகரீகம் எந்தவிதப் வலியுமின்றி ஏற்றுக் கொண்டிருக்கிறோம். நமது மண் சார்ந்த வாழ்வும், செயலும் அனைத்தும் ஆன்மீகம் சார்ந்தவை ஆகும். அவை கண்ணால் காண முடியாததும், அறிவால் அறிந்து கொள்ள முடியாததும், அனுபவ உணர்வால் மட்டுமே உணர்ந்து கொளளக் கூடியதும் ஆகும். அவற்றை எளிமையான வழிபாட்டு முறை மூலமே நம்மைப் பின்பற்றச் செய்துள்ளனர் எனில் அது மிகையாகாது.

**நிலையும் மரபுசார் விளக்கமும்**

அறிவியல் பூர்வமான உண்மை என்பது அறிவால் அறியக்கூடியதும், ஏற்றுக் கொள்ளும் தன்மையில் புலனாவதும் ஆகும். பிரபஞ்சத் தத்துவமே உடல் தத்துவம். உடல் தத்துவமே பிரபஞ்சத் தத்துவம் என்பது உணர்தலுக்கும உணர்வுக்கும் அப்பாற்பட்ட நிலையாகும். அனைவராலும் இவற்றைப் புரிந்து கொள்ளவும், உணர்ந்து கொள்ளவும் ஏற்றுக் கொள்ளவும் இயலாது. அதனால் தான் ஆன்மீகம் சார்ந்த உண்மைகளை (இந்தியத் தத்துவத்தினை) "பைனல் சுரப்பிக்கும் ஆன்மீக அனுபவத்திற்கும் இடையிலான தொடர்பு அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்படவில்லை

 **ISBN Number: 978-81-963413-5-0**

அதை நிரூபிக்க அறிவியல் சான்றுகள் இல்லை என்றாலும் மூன்றாவது கண் ஆன்மீக உலகிற்கு ஒரு சாளரம் என்று கோவிங்டன் நம்புகிறார்" (இணையதளம்) அதன்படி உண்மைப் பொருளை உணர்ந்தவர்கள் ஆன்ம அனுபவ அடிப்படையில் நிலைப்பட்டி சேர்ந்த நிலையின் முக்கியத்துவத்தை மனிதனின் தலையில் அமைந்துள்ள பீனியல் சுரப்பி என்பதனோடு ஒப்பிட்டுக் கூறுகின்றனர்.

**"Pineal gland** என்னும் பீனியல் சுரப்பியானது (நாளமில்லாச் சுரப்பி) மனிதனின் உச்சிக்குழியில் உள்ளது. இது மனிதன் பிறக்கும் போதும், பிரபஞ்சத்தின் செய்திகளை உள்வாங்கிக் கொள்கிறது. மனிதன் இறக்கும் போதும் உயிர் அதன் வழியாகப் பிரிந்து செல்கிறது. இங்கு இதற்கு எவ்விதமான தடையும் இல்லாமல் உள்ளது. அதாவது உள்ளே வருவதற்கும், வெளியே செல்வதற்கும் எந்த விதமான தடையும் இல்லாமல் இவ்விடம் உள்ளது. இந்தத் தன்மையைக் கொண்ட இவ்விடத்திற்கு நிலை வாசல் என்று பெயரிட்டுள்ளனர். மாறுபாடற்ற நிலைத்த தன்மை கொண்டதனை நிலை என்ற சொல் குறிக்கும். நிலைத்த தன்மை என்பதற்கு சிவத்தன்மை என்ற பெயரும் உண்டு. எனவே Pineal gland ஐ சிவத்தன்மை என்று குறிப்பிடுவது மரபு. உடல் அமைப்பை வைத்தே கட்டிடக்கலையின்

 **ISBN Number: 978-81-963413-5-0**

அமைப்பும் உள்ளது. மனிதனின் தலைப்பகுதியில் உள்ள இந்த நாளமில்லாச் சுரப்பியின் செயல்பாட்டைப் போன்று மனைக்கு உரிய மனையாளின் செயல்பாட்டினாலேயே அவளுடைய பாவ புண்ணிய அடிப்படையிலேயே, அதாவது வினைப் பதிவிற்கு ஏற்பவே வீட்டின் தன்மையும் அமைகிறது" **(**இராமமூர்த்தி) என்பது கோவிங்டன் குறிப்பிடும் கருத்திற்கு ஏற்ப உள்ளது. ஒவ்வொன்றின் உள் மையப் பொருளை உணர்ந்தவர்களாகிய நம் முன்னோர்கள் இதன் அடிப்படையிலேயே தலைவாசல் கதவிற்கு நிலை, நிலைக்கதவு என்று பெயர் சூட்டியுள்ள பாங்கின் ஆன்மீக அடிப்படையிலான உட்கருத்தை உணர முடிகிறது.

**முடிவுரை**

நம் முன்னோர்கள் ஒரு பொருளின் தன்மையையும், அதன் பயன்பாட்டையும் சாதாரண நிலையிலன்றிக் கலை மற்றும் அறிவியல் சார்ந்த நிலையிலும், ஆன்மீகம் சார்ந்த நிலையிலும் உணர்ந்து அதற்கான பயன்பாட்டையும், பழக்க வழக்கத்தையும், புனிதத்துவத்தையும் தொடருமாறு (மரபாக) உருவாக்கியுள்ளனர். நாம் வசிக்கும் வீட்டின் முன் வாசல் எனப்படும் தலைவாசலானது இருப்பிடம், திசை, அளவு உரிய கால நேரம் ஆகியனவற்றைப் பார்த்து சாத்திர முறையில் அமைக்கப்பட்டுள்ளது. மற்றும் வீட்டிற்கு

 **ISBN Number: 978-81-963413-5-0**

வருபவர்களின் மன உணர்வைத் தூய்மைப்படுத்துகிறது. கலை உணர்வைத் தூண்டி மனதை மென்மையாக்குகிறது. எதிர்மறை ஆற்றலை நீக்கி நேர்மறை ஆற்றலை உருவாக்குகிறது. கோயிலும் நமது உடலும் ஒன்று என்பதால் கோயிலின் சிவத்தன்மையும், நம் தலையில் சுரக்கும் பீனியல் சுரப்பி எனப்படும் இடத்தின் தன்மையும் நிலை என்ற பெயரைப் பெறுகின்றன. நம் முன்னோர்கள் இதற்கும் தலை வாசலுக்குமான நிலைப்பாட்டையும் செயல்பாட்டையும் உணர்ந்து தலை வாசலுக்கு நிலை என்று பெயரிட்டுள்ளனர் என்பதை உணரமுடிகின்றது.

**அடிக் குறிப்புகள்**

[1] களஆய்வு ஒன்று - ராஜராஜன் (பழம் பொருட்செல்வர்) சிவகாசி, 26/5/2023

[2] களஆய்வு இரண்டு சுந்தர், ஆன்மீக அன்பர், விருதுநகர். 4-06-2023

[3] இணையதளம் - https://www.healthline.com/health/mind-body/how-to-open-your-third-eye#what-does-it-do

[4] களஆய்வு மூன்று- இராமமூர்த்தி, உலக சமாதான ஆலயம், சிவகாசி. 30-05-2023

 **ISBN Number: 978-81-963413-5-0**

## இலைச் சிற்பங்களோடு கூடிய அம்மனும் காமதேனுப் பசுவும்



## பெருமாளின் தசாவதாரக் காட்சிகள்



 **ISBN Number: 978-81-963413-5-0**

# அகநானூறு – நெய்தல் திணையில் காணலாகும் வணிகச் சிந்தனைகள்

**முனைவர் செ. சாந்தி,** உதவிப்பேராசிரியர், இளநிலைத் தமிழ்த்துறை, அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி, சிவகாசி.

## தோற்றுவாய்

கடலும் கடல் நிலமாக அடையாளப் படுத்தப்படும் நெய்தல் நிலத்தில் வாணிகம் செய்யும் மக்கள் பரதவர் என்றும் பட்டினவர் என்றும் அழைக்கப்பட்டனர். இவர்கள் கடலின் இயல்புத் தன்மை, சீற்றம், பருவ காற்றின் நிலை, மழைக்காலச் சூழல், நாள் கோள்களின் மாற்றம் முதலானவற்றை நன்கு அறிந்திருந்தனர். மரக்கலம் ஏறிச்சென்று மீன் பிடிப்பதும், உப்பு விளைவிப்பதும் இவர்களின் முக்கியத் தொழிலாக இருந்துள்ளது. உள்நாட்டு வாணிகம் என்பது பெரும்பாலும் பண்டமாற்று முறையிலே இருந்துள்ளது. உப்பு வணிகம், மீன் வணிகம், கள் வணிகம், பொன் வணிகம் போன்ற வணிக முறைகள் நடைமுறையில் இருந்துள்ளன. இவ்வணிகத்தில் பெண்களும் ஈடுபட்டிருந்தனர். அவற்றினை எடுத்துரைப்பதே இவ்வாய்வின் நோக்கமாக அமைகின்றது.

 **ISBN Number: 978-81-963413-5-0**

பாட்டும் தொகையும் என்றழைக்கப்படும் சங்க இலக்கிய நூல்களுள் அதிகமான அடி அளவினையும் அகம் சார்ந்த நானூறு பாடல்களையும் கொண்டு சிறப்புற்றுத் திகழும் முதல் அகநூல் அகநானூறு ஆகும். வெவ்வேறான காலகட்டங்களில் வாழ்ந்த பல்வேறு புலவர்களால் பாடப்பட்ட இந்நூலை மதுரை உப்பூரிகுடி கிழான் மகனார் உருத்திரசன்மன் தொகுத்ததாகவும், பாண்டியன் உக்கிரப் பெருவழுதி தொகுப்பித்ததாகவும் இலக்கிய வரலாற்று நூல்கள் வழி அறியக்கிடைக்கும் செய்தியாகும். அகம், அகப்பாட்டு, நெடுந்தொகை என்றழைக்கப்படும் இந்நூல், களிற்றியானை நிரை(120), மணிமிடை பவளம் (180), நித்திலக்கோவை (100) என்ற முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது.பண்டைத் தமிழர்களின் அகம் சார்ந்த நிகழ்வுகளை மட்டும் சுட்டிச் செல்லாமல் ஒழுக்கம், வீரம், வளமை முதலான பண்பாட்டுக் கூறுகளையும் வாணிகம்,பண்டமாற்று முறை, உணவு முறை முதலான வாழ்வியல் விழுமியங்களையும் சுட்டிச்செல்கிறது. இவற்றுள் வணிகச் செய்திகளை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

பண்டைத் தமிழர் தம் வாழ்க்கைக்; கருவூலத்தின் திறவுகோலாகச் சங்க இலக்கியம் திகழ்கின்றது. நிலத்தின் தன்மை,தகவமைப்பின் அடிப்படையில் குறிஞ்சி, முல்லை,

 **ISBN Number: 978-81-963413-5-0**

மருதம், நெய்தல் பாலை என்று ஐவகையாகப் பிரித்து மக்கள் வாழ்ந்தனர். இந்நிலங்களில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறை, தொழில், பண்பாடு, வழிபாட்டு முறைகள் முறையே வெவ்வேறானவைகளாக வேறுபட்டவைகளாக இருந்தன. உண்ணும் உணவிற்காக இடம் பெயர்வதும் அது கிடைக்கும் இடங்களைத் தேடி அலைவதுமாக மக்கள் நாடோடிகளாக கற்கால மனிதர்களாக வாழத்தளைப்பட்டனர். அதன் பின்னர் நாகரிகமான வாழ்க்கை வாழத் தொடங்கி, சிறுசிறு கருவிகளைக் கொண்டு தொழில் செய்து பிழைக்கும் இரும்பு கற்கால வாழ்க்கை வாழ முற்பட்டனர்.ஐவகை நிலங்களிலும் வாழ்ந்த மக்கள் அந்நிலத்தின் தகவமைப்பிற்கு ஏற்பத் தொழில்களைச் செய்தனர். தங்கள் நிலத்தில் எளிதாகக் கிடைக்கும் பொருட்களைப் பிறிதொறு நிலத்திற்குக் கொண்டு சென்று பொருள் மாற்றிக் கொள்ளும் வழக்கம் இருந்ததுள்ளது.தாங்கள் வாழும் இடம், சூழலுக்குத் தக்கவாறு சிறுதொழில்கள் செய்து வாழும் மக்களும், தொழில்கள் செய்து செல்வ வளத்தைப் பெருக்கிப் பொருள் வளத்துடனும் சமுதாய மதிப்புடனும் வாழ்ந்த மக்களும் இருந்துள்ளனர். இதனாலேயே தொல்காப்பியர் குறிப்பிடும் நான்கு நில வருணத்தார்களின் வரிசையில் வணிகர்கள், அரசனுக்கு அடுத்த நிலையில் வைத்துப் போற்றப் பட்டிருக்கிறார்கள்.

 **ISBN Number: 978-81-963413-5-0**

வாணிகம் செய்து பெரும் பொருள் ஈட்டிய வணிகப் பெருமக்களுக்கு 'எட்டி' என்னும் சிறப்புப் பெயரும் 'எட்டிப் பூ' என்னும் பொற்பதக்கமும் அளிக்கப் பட்டிருக்கிறது.

**நெய்தல் நில மக்களின் வாழ்க்கை முறை**

கடலும் கடல் சார்ந்த நிலமும் நெய்தல் என்றழைக்கப் படுகிறது.இந்த நிலத்தில் நெல், கம்பு,சோளம் முதலான தானிய வகைகளை விளைவிக்க முடியவில்லை. "நெய்தல் நிலத்து மக்கள் கட்டு மரங்களிலும் படகுகளிலும் கடலில் வெகு தூரம் சென்று வலை வீசி மீன் பிடித்து வந்து விற்று வாழ்ந்தார்கள். கடலில் சுறா, இறால், திருக்கை முதலான மீன் வகைகள் கிடைத்தன. அவற்றைப் பிடித்து வந்து அயல் ஊர்களில் விற்று (பண்டமாற்று செய்து) தானியங்களைப் பெற்றார்கள். விற்று மிகுந்த மீன்களை உப்பிட்டுப் பதப்படுத்தி உலர்த்திக் கருவாடு செய்து விற்றார்கள்" (பழங்காலத் தமிழர் வாணிகம், ப-11) என்று மயிலை சீனிவேங்கடசாமி குறிப்பிடுகிறார்.

இவ்வாறாகத் தங்கள் தேவைக்கு அதிகமாக மீனும், உப்பும், பதப்படுத்திய கருவாடும் கிடைத்த போது அவற்றை அருகிலுள்ள ஊர்களுக்குச் சென்று விற்பனை செய்தனர். "நெய்தல் நிலமக்கள் மீன் பிடித்தல், உப்பு விளைவித்தல் ஆகிய தொழில்கள் புரிந்து வாழ்ந்தனர்.


**ISBN Number: 978-81-963413-5-0**

மீனை உணங்க வைத்துக் கருவாடாக்கி அதனை விற்று வாழ்வதும் வழக்கில் இருந்தது. கழுதைகளிலும் வண்டிகளிலும் உப்பு ஏற்றப்பட்டு அடுத்த ஊர்களுக்கு விற்கக் கொண்டு செல்லப்பட்டது." என்கிறார் இராமகிருட்டிணன். (தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும், ப - 86) எனவே, நெய்தல் நில மக்களின் வாழ்க்கை என்பது வாணிகம் செய்ய இடம் விட்டு இடம் நகரும் வாழ்க்கையாகவும், வெள்ளப்பெருக்கான காலங்களிலும் கடலுக்குள் சென்று மீன் பிடித்து வரும் அச்சம் தரும் வாழ்க்கையாகவும் இருந்துள்ளமையை நம்மால் உணர்ந்து கொள்ள முடிகிறது.

**சமூகக் கட்டமைப்பு**

ஒரு நாட்டின் சமூகப் பொருளாதார முன்னேற்றம் அந்நாட்டின் வாணிக முறையால் தீர்மானிக்கப் படுகின்றது. வணிகர்கள் தங்கள் பொருட்களைக் கழுதைகள், வண்டிகளில் ஏற்றிக் கொண்டு தரை வழியாகச் சென்று விற்றனர். இவர்கள் பெருங்குடி வணிகர்கள் எனப்பட்டனர் செல்லும் வழிகளில் வழிப்பறிக் கொள்ளையர்களிடமிருந்து தங்களையும் தங்கள் உடைமைகளையும் பாதுகாத்துக் கொள்வதற்காகக் கூட்டம் கூட்டமாகச் சென்றனர். கூடவே வலிமை மிகுந்த படை வீரர்களையும் உடன் அழைத்துச் சென்றனர். கூட்டமாகச் சென்ற வணிகக்


**ISBN Number: 978-81-963413-5-0**

கூட்டத்தார் 'வணிகச்சாத்து' என்றும் பெயர் சூட்டி அழைக்கப்பட்டனர். சிறு கருவிகளைக் கொண்டு தொழில் செய்வோரும் இருந்துள்ளனர். "பண்டைக் காலத்தில் இன்ன வேலையை இன்னார் தான் செய்ய வேண்டும் என்ற கட்டுப்பாடும் இருந்தது. இந்தக் கட்டுப்பாடு சாதி வேற்றுமையை உறுதிப்படுத்தி வந்தது." (பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும், ப - 12) இவ்வாறாக தொழில் கட்டமைப்பின் அடிப்படையில் சாதிகளும் அதனூடேயான சமூகக் கட்டமைப்புகளும் தோற்றம் பெற்றன. வள்ளுவரும், "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்" (குறள், 972) என்கிறார்.

நாகரிகம் இல்லாமல் கூட்டமாகக் குழுக்களாக வாழ்ந்த போது அம்மக்களிடையே பிரிவுகள் தோன்றியிருக்காது. தொழில் செய்வதற்கான இடம்பெயர்வும், நாகரிகத்தின் வளர்ச்சியினாலும் சாதிப் பாகுபாடு தோன்றியிருக்க வேண்டும். தொல்காப்பியமும் "நீர்வாழ் சாதியும் அதுபெறற்கு உரிய" (தொல்காப்பியம், நூ - 1537) எனச் சுட்டும் போது நீரில் வாழும் உயிரினங்களைப் பிரித்தறியவே சாதி என்கிற சொல்லாடலைப் பயன்படுத்தியுள்ளார்.

**உப்பு வணிகம்**

உப்பு என்பது தமிழர் வாழ்வில், உணவில்

 **ISBN Number: 978-81-963413-5-0**

இரண்டறக் கலந்து விட்ட ஒரு கனிமப் பொருளாகும். பழங்காலந்தொட்டே கடல் நீரை ஆவியாக்கி உப்பைப் பதப்படுத்தும் பழக்கம் மக்களிடையே இருந்துள்ளது. அது வளமையின் அடையாளமாகவும் திகழ்கிறது. புதுமனைப் புகுவிழா, திருமணம் முதலான பல்வேறு நற்காரியங்களுக்கு உப்பே பிரதானம். உணவின் சுவைக்கும் உறவின் தொடர்ச்சிக்கும் உப்பு அவசியமான ஒன்றாகும். எனவே தான் ‘உப்பில்லாப் பண்டம் குப்பையிலே’, ‘உப்பிட்டவரை உள்ளளவும் நினை’, ‘உப்பிட்டுக் கெட்டது மாங்காய் உப்பிடாமல் கெட்டது தேங்காய்’ என்பவை முதலான பல்வேறு பழமொழிகள் வழக்கத்தில் இருந்துள்ளன. உப்பு விளைவிக்கும் இடம் அளம் எனப்பட்டது. அதுவே காலப்போக்கில் உப்பளம் என்றானது.தொடக்ககாலத்தில் பண்ணைகளில் வேலை பார்த்த மக்களுக்குக் கூலியாக சம்பா நெல்லும் அளமும் (உப்பும்) கொடுக்கப்பட்டது இம்முறையே இந்நாளில் ‘சம்பளம்’ என்னும் சொல்வழக்கானது.

**நெடுந்திமில் தொழிலோடு வைகிய தந்தைக்கு**
**உப்புநொடை நெல்லின் மூரல் வெண்சோறு**
**அயிலை துழந்த அம்புளிச் சொரிந்து,**
**கொடுமீன் தடியொடு குறுமகள் கொடுக்கும்…**
**(அகம் - 60)**

 **ISBN Number: 978-81-963413-5-0**

சேரனது தொண்டிப்பட்டினத்தைச் சிறப்பிக்கும் இப்பாடலில், கடலில் இறால் மீனைப் பிடித்து வந்த தந்தைக்கு, மகளானவள் உப்பை விற்றுக் கிடைத்த நெல்லை அரிசியாக்கிச் சோறு சமைத்துக் கொடுத்தாள் என்கிற செய்தி காணக்கிடைக்கின்றது.

**பெருங்கடல் வேட்டத்துச் சிறுதுடிப் பரதவர்**
**இருங்கழிச் செறுவின் உழாஅது செய்த**
**வெண்கல் உப்பின்…**
**நெல்லின் நேரே வெண்கல் உப்பு. (அகம் - 140)**

மீன்களை வேட்டையாடும் பரதவர்கள் தாங்கள் உழாமலே விளைவித்த உப்பை வேறு நிலங்களுக்குச் சென்று விற்பர்.அப்போது ஒரு படி நெல்லுக்கு ஒரு படி உப்பு விலையாகக் கொள்ளப்பட்டது.இதன்வழி நெல்லும் உப்பும் ஒப்ப விளையாகக் கருதப்பட்ட நிலையை அறிய முடிகிறது.இதே செய்தியைப் பின்வரும் பாடலடிகளும் விளக்கிச் செல்வது இங்கு சுட்டிக்காட்டத் தக்கது ஆகும்.

**நெல்லும் உப்பும் நேரே, ஊரீர் கொள்ளீரோ… (அகம் - 390).**

**தெண்கழி விளைந்த வெண்கல் உப்பின் ….**
**உரனுடைச் சுவலபகடுபல பரப்பி**
**உமண்உயிர்த்து இறந்த ஒழிகல் அடுப்பின்”. (அகம் - 159)**

 **ISBN Number: 978-81-963413-5-0**

இவ்வாறு உப்பு வணிகர் உப்பு மூட்டைகளைப் பிற ஊர்களுக்கு ஏற்றிச் சென்று விற்று விட்டுத் திரும்பும் போது வண்டிகளின் காளைகளை மேயவிட்டு கல் அடுப்பு வைத்துச் சமைத்துண்டு இளைப்பாறிச் செல்வர் என்கிற பயணக் குறிப்பும் அறியக் கிடைக்கின்றது.

**பொன் வணிகம்**

பேரியாறு சேர அரசர்களுக்கு உரியது. அங்கு மரக்கலம் ஏறி வந்த யவனர்கள் தாங்கள் கொண்டு வந்த பொன்னைக் கொடுத்து விட்டு மிளகை ஏற்றிச் செல்வர். பழந்தமிழ் இலக்கியங்களில் மரக்கலம் பற்றிய குறிப்பு காணக்கிடைக்கின்றது. மரக்கலம், கலம், நாவாய், வங்கம் எனப் பல வகைகள் இருந்துள்ளன. இக்கலங்களின் உதவியுடன் சாவகம், கடாரம், மலையம் முதலான ஊர்களுக்குச் சென்று வந்தமையையும் இடையில் மணிபல்லவத் தீவில் தங்கிச் சென்றமையையும் *மணிமேகலை* எடுத்துரைக்கிறது. மரக்கலன்களைச் செய்பவர்களும் அதனைப் பழுது பார்ப்பவர்களும் இருந்துள்ளனர். இவர்களைக் ‘கலஞ்செய் கம்மியர்’ எனப்பெயரிட்டு அழைத்துள்ளதை *மணிமேகலை* வழி அறியலாம். பெருங்கடலில் ஓடும் கலம் நாவாய் என்றும் பெருங்கப்பல்கள் வங்கம் என்றும் குறிப்பிடப்படுகின்றன.

**பொருளீட்ட விரும்பிக் கப்பல்களைச் கடலில் போக்கினர். வணிகக் குழுக்கள்**

 ISBN Number: 978-81-963413-5-0

**விற்பனைக்காகவும் பண்டமாற்றிற்காகவும் நூறு துடுப்புகளைக் கொண்ட கப்பல்களில் கடல்மேல் சென்றனர் (தமிழர் வரலாறு, ப - 32)**

இதன்வழிப் பண்டைத் தமிழர் கடல் வாணிகத்தை அறிந்திருந்தனர் என்பது புலனாகிறது. ‘காலின் வந்த கருங்குறி மூடை’ என்பது காற்றின் உதவியால் கப்பலில் வந்த மிளகு மூட்டைகளைக் குறிக்கிறது.சாவக நாட்டிலே மிளகு விளைவிக்கப்பட்டாலும் சேர நாட்டு மிளகே தரம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.எனவே தான் “சேர நாட்டு மிளகை யவனர்கள் பெரிய நாவாய்களில் வந்து பெருவாரியாக வாங்கிக் கொண்டு போனபடியால் அது பற்றாக்குறை பொருளாக இருந்தது. ஆகவே கிழக்குக் கரைப் பக்கத்திலிருந்த சோழ நாட்டு வணிகர் சாவக நாட்டிலிருந்து மிளகைக் கொண்டு வந்து விற்றார்கள்.” (பழங்காலத் தமிழர் வாணிகம்., ப - 70) என்று மயிலை சீனிவேங்கடசாமி குறிப்பிடுகிறார்.

**யவனர் தந்த விளைமான் நன்கலம்**

**பொன்னொடு வந்து கறியொடு பெயரும். (அகம் – 149)**

மருத வயல்களில் மிளகுக் கொடிகள் பயிரிடப்பட்டுள்ளன. ‘கறிவளர் சாந்தம்.’ (அகம் - 2), ‘துறுகல் நண்ணிய கறி இவர் படப்பை.’ (அகம் - 272) என்ற அடிகளிலிருந்து சந்தன மரங்களின் மீது மிளகுக் கொடிகள் படர்ந்து


**ISBN Number: 978-81-963413-5-0**

வளர்ந்திருந்தன என்பதனை அறிய முடிகிறது. இவ்வாறு விளைவிக்கப் பட்ட மிளகினை யவனர்கள் பொன்னைக் கொடுத்து வாங்கிச் சென்றுள்ளனர். “அக்காலைய சமையற்கலை நூல்களில் உப்பு, சர்க்கரையை விட மிளகே முக்கியப் பொருளாகக் கூறப்பட்டது. ஆகவே, மேற்கே நோக்கிச் செல்லும் பல கப்பல்களில் பாதிப்பண்டம் மிளகால் அமைந்தது எனக் கூறப்பட்டது.” (கோவிந்தன். கா, மேலது, ப - 129)

**கள் வணிகம்**

பனை, தென்னை மரங்களில் உள்ள பாளையினை வெட்டி அதிலிருந்து வடியும் பால் போன்ற திரவத்தைப் பானைகளில் சேகரிப்பர். இதனுடன் சிறிது சுண்ணாம்பு சேர்த்துப் பதநீராகக் குடிக்கும் வழக்கம் இன்றும் நடைமுறையில் உள்ளது. இவ்வாறு இறக்கப்படும் கள்ளிற்கு ஏராளமான மருத்துவ குணங்களுண்டு. மாறாகப் புளிப்புச் சுவையேற்றிக் குடிக்கப்படும் போது போதை தரக்கூடியதாகவும் உடலுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடியதாகவும் மாறுகிறது. தென்னங்கள், பனைங்கள், அரிசிக்கள், தோப்பி, தேக்கள், பிழி, மணங்கமழ் தேறல், பூக்கமழ் தேறல், நறவு எனப் பல வகைகள் உண்டு. நெல்லால் சமைத்த கள் நறவு எனவும், பூக்களால் சமைத்த கள் தேறல் எனவும், அத்துடன்

 **ISBN Number: 978-81-963413-5-0**

குங்குமம் சேர்த்து தருகின்ற கள்ளிற்குப் பூக்கமழ் தேறல் எனவும் பெயரிட்டனர்.

கள் என்ற சொல் வெறிநீர், பதநீர், மட்டு, தேன் ஆகிய பதங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. சங்க இலக்கியங்கள், நறவுண்ட குறமாக்கள் குரவைக் கூத்தாடி மகிழ்ந்தனர். போரில் வென்ற வீரர்களுக்கு அரசன் வெற்றியின் பரிசளிப்பாக முதலில் கள்ளையே வழங்கினான். பொற்கிண்ணத்தில் கள்ளை அளிப்பது விருந்தினரைப் பேணும் சிறந்த முறையாகக் கருதப்பட்டது. பூப்பெய்தி, மக்கட்பேறான பெண்களுக்கும் கள் (கால்சியம் சத்திற்காக) வழங்கப்பட்டுள்ளது. வேடர்கள் காட்டில் வேட்டையாடிக் கொன்ற யானையின் தந்தங்களைக் கள்ளுக் கடையில் கொடுத்து கள் அருந்தியதை அம்மூவனாரின் பாடல் கீழ்வருமாறு எடுத்துரைக்கிறது.

**அருநிறத் தழுத்திய அம்பினர் பலருடன்**
**அண்ணல் யானை வெண்கொடு கொண்டு**
**நறவுநொடை நெல்லின் நாண்மகிழ் அயரும்**
**(அகம் - 61)**

பரதவர்கள் மீனுக்கு விரித்த வலையில் விலையுயர்ந்த முத்துச் சிப்பிகளும் விழுகின்றன. அவற்றிலிருந்து முத்துகளைத் தனியே பிரித்துக் கூட எடுக்காமல் நேரே கள்ளுக் கடைக்குக் கொண்டு சென்று,கள்ளுக்கு

 **ISBN Number: 978-81-963413-5-0**

இணையாக முத்துகளைப் பண்டமாற்று செய்யும் முறை இருந்துள்ளதை,

**பல்மீன் கொள்பவர் முகந்த இப்பி**
**நார்அரி நறவின் மகிழ்நடைக் கூட்டும்**
**(அகம் - 296)**

என்ற பாடலடிகள் மூலம் தெரிந்து கொள்ள முடிகிறது .இவ்வாறாக, விலைமதிப்பில்லாத யானையின் தந்தங்களையும் முத்துகளையும் விலையாகக் கொடுத்துக் கள்ளை வாங்கிச் சென்றதன் வழி கள் மருத்துவப் பொருளாகவும்,நன்றி மிகுந்த பரிசுப் பொருளாகவும், விருந்தினர்களுக்கு அளிக்கும் உயரிய பொருளாகவும் கருதப்பட்டதை அறிய முடிகிறது.

**மீன் வணிகம்**

நெய்தல் நில மக்கள் மீன் பிடிக்கும் தொழிலை முதன்மைத் தொழிலாகக் கொண்டிருந்தனர். ஆழம் அதிகம் கொண்ட கடலில் வெகுதொலைவில் சென்று, குறுகிய கண்களையுடைய வலைகளை வீசிப் பிடிக்கும் பலவகையான மீன்களைத் தங்களை நாடி வரும் இரவலர்களுக்கும், தன்னிடம் இரந்தோர்க்கும் கொடுத்து விட்டு எஞ்சிய மீனைப் பல கூறுகளிட்டு விழாக்கள் நடைபெறும் இடங்களிலும், மக்கள் கூடுகின்ற இடங்களிலும் விலை கூறிக் கூவி விற்பர். பெரும்பாலும், பெண்களே இத்தகைய வாணிகத்தில் பெரும்

 **ISBN Number: 978-81-963413-5-0**

பான்மையான பங்களிப்பினைச் செய்துள்ளனர். மீனுக்கு விலையாகச் செந்நெல்லினைப் பண்டமாற்றாகப் பெற்றுள்ளனர். இதனைத்,

**திமிலோன் தந்த கடுஞ்கண் வயமீன்....**
**விழவுஅயர் மறுகின் விலைஎனப் பகரும்**
**கானல்அம் சிறுகுடி... (அகம் - 320)**
**பசுமீன் நொடுத்த வெண்நெல்... (அகம் - 340)**

என்ற பாடலடிகள் புலப்படுத்துகின்றன.

**வாணிகத்தில் பெண்கள்**

சங்க காலத்தில் பெண்கள் வீரம், விவேகம் மிக்கவர்களாக, அரசியல் ஆலோசனைகளைக் கூறும் தூதுவர்களாக, புலமை மிக்கவர்களாக இருந்தனர் என்பது அனைவரும் அறிந்ததே. இவ்வாறு உயரிய நிலையிலிருந்த பெண்களை ஆணாதிக்கச் சமுதாயம் தன் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவர,

**கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்**
**மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்**
**விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்**
**பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்.**
**(தொல்,நூ - 1098)**

என்றவாறு பெண்களின் பண்புகளை வகுத்தளித்தது. ஆனால் பண்டமாற்று வணிகத்தில் நெய்தல் நிலப் பெண்கள் முனைப்புடன் ஈடுபட்டுள்ளனர்.

 **ISBN Number: 978-81-963413-5-0**

**மால்இருள் நடுநாள் போகி.தன்ஐயர்**
**காலைத் தந்த கணைக்கோட்டு வாளைக்கு ...**
**பழஞ்செந் நெல்லின் முகுவை கொள்ளாள்,**
**கழங்குஉறழ் முத்தமொடு நன்கலம் பெறூஉம்**
**(அகம் - 126)**

தன் தமையனான பாணன் பிடித்து வந்த வாளை மீனைக் கூடையில் இட்டு தெருக்கள்தோறும் சுற்றித்திரிந்து மீனுக்கு ஈடாகப் பழைய நெல்லினை வாங்காமல் முத்துக்களையும் அணிகலன்களையும் வாங்கி வந்தாள் என்கிறபோது பாண்மகளது வாணிபத் திறம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டியதாய் உள்ளது.

**நெல்லின் நேரே வெண்கல் உப்புஎனச்**
**சேரி விலைமாறு கூறலின் ... (அகம் - 140)**
**தழையணி அல்குல் செல்வத் தங்கையர்**
**விழவுஅயர் மறுகின் விலைஎனப் பகரும்..**
**(அகம் - 320)**
**நெல்லும் உப்பும் நேரே, ஊரீர்**
**கொள்ளீ ரோஎனச் சேரிதோறும் நுவலும்.**
**(அகம் - 390)**

இவ்வாறாக ஒரு படி நெல்லுக்கு ஒரு படி உப்பு என்றவாறு உமணர் பெண்கள் கூவி விற்றதை இதன் வழி அறிய முடிகிறது.


**ISBN Number: 978-81-963413-5-0**

**நிறைவாய்**

உணவுப் பொருட்களை விளைவிக்க முடியாத நெய்தல் நிலப் பரதவர்கள் தங்களுக்குக் கிடைத்த மீன், உப்பினைப் பண்டமாற்று செய்து உணவுப் பொருட்களைப் பெற்றுள்ளனர். தொழில் கட்டமைப்பின் அடிப்படையில் சமூகக் கட்டமைப்பு தோற்றம் பெற்றிருக்கிறது. நெல்லும் உப்பும் ஒரே விலையாகக் கொள்ளப்பட்டதை அறிய முடிகிறது. உப்பு வளமையின் அடையாளமாகக் கருதப்பட்டது. எனவே நெல்லுக்கு ஈடாகக் கருதப்பட்டது. கடல்வழி வாணிகத்தில் யவனர்கள் சிறப்புற்று விளங்கினர். அவர்கள் பொன்னை இறக்குமதி செய்து மிளகினை வாங்கிச் சென்றுள்ளனர். கள் குடிக்கும் வழக்கம் சங்ககால மக்களிடம் இருந்துள்ளது. கள்ளுக்கு ஈடாக விலை மதிப்பற்ற யானையின் தந்தங்களையும், முத்துக்களையும் பண்டமாற்றாகப் பெற்றுள்ளனர். பரதவர்கள், பாணர்கள் கடலுக்குள் சென்று மீன் பிடித்து வந்துள்ளனர். அந்த மீன்களைக் கூடையில் சுமந்து சென்று அவர்தம் வீட்டுப் பெண்கள் விற்றுள்ளனர். இதன்வழிப் பெண்களும் வாணிகத்தில் ஈடுபடுத்தப் பட்டனர் என்பது புலனாகின்றது. பொன்னும், முத்தும், யானையின் தந்தங்களும், மிளகும், நெல்லும், உப்பும், கள்ளும், மீனும்


**ISBN Number: 978-81-963413-5-0**

ஒரே நிலையிலே வைத்து மதிப்பீடு செய்யப்பட்டதை அறிய முடிகிறது.

**துணை நின்ற நூல்கள்**

[1] கோவிந்தன், கா. *தமிழர் வரலாறு*, பூம்புகார் பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, 2010.

[2] சிதம்பரனார், சாமி. *பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும்.* ஸ்ரீசெண்பகா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, 2010.

[3] தமிழண்ணல் (உ.ஆ). *தொல்காப்பியம்.* மீனாட்சி புத்தக நிலையம், மதுரை. முதல் பதிப்பு, 2010.

[4] இராமகிருட்டிணன். ஆ. *தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும்.* சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, முதல் பதிப்பு, 2015.

[5] மயிலை சீனிவேங்கடசாமி. *பழங்காலத் தமிழர் வாணிகம்* (சங்க காலம்). ஸ்ரீசெண்பகா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, 2011.

 **ISBN Number: 978-81-963413-5-0**

# சங்க இலக்கியங்களில் நீர்ப்பாசன தொழில்நுட்பம்

**முனைவர் பா.தமிழரசி**, தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்,
அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி, சிவகாசி.

மக்களின் இயற்கையோடு இயைந்த வாழ்வு இலக்கியத்தின் ஆணிவேராக அமைந்தது. பண்டைத் தமிழர் நிலத்தினை இயற்கை அமைப்பு, இயற்கைச் சூழல், பருவகாலம் ஆகியவற்றிற்கேற்ப பாகுபடுத்தியுள்ளனர். நாடோடி வாழ்க்கை முடிவுற்று, ஓரிடத்தில் கூடி வாழத்தலைப்பட்ட சங்ககால மக்கள் நிலத்தை அடிப்படையாக கொண்ட வாழ்வை மேற்கொண்டனர். உற்பத்திக்கு அடிப்படை ஆதாரமாக நிலமே விளங்கியது. 'ஒவ்வொரு குழுவும் நிலத்தைக் கையகப்படுத்தி பின்னர் அது தனி உடைமையாக மாறிய நிலையில் வேளாண் வர்க்கம் உருப்பெற்றது. (பெ. மாதையன், சங்க இலக்கியத்தில் வேளாண் சமுதாயம், ப. 4) தமிழகத்தில் சிறந்த தொழிலாக வேளாண்மை விளங்கியது. 'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம், உழந்தும் உழவே தலை' என வள்ளுவரும் வலியுறுத்தியுள்ளார். வேளாண்மை சிறப்புறக் காரணமாக விளங்கியவை நீர் நிலைகளும் நீர் ஆதாரங்களுமேயாகும்.

 ISBN Number: 978-81-963413-5-0

பருவம் தவறாமல் பெய்யும் மழை நீரைத் தேக்கிக் கயம், வாவி, தடாகம், பொய்கை, குட்டம், குளம், ஊரி, கிடங்கு, மதகு, மடை போன்ற நீர் நிலைகளை உண்டாக்கி அவற்றிலிருந்து தேவைக்கேற்ப நீரைப் பயன்படுத்தினர் என்பதை இலக்கியங்கள் வாயிலாக அறியமுடிகின்றது. ஓலைச்சுவடி வடிவில் காணும் கூவநூல் நிலத்தின் தன்மை பற்றியும், மரம், செடி, கொடிகள் பற்றியும் அவற்றின் அடையாளம் கண்டு நீர் இருக்கும் பகுதியைப் பற்றி அறிந்து கொள்ளும் களஞ்சியமாக விளங்குகிறது. ஓடைகளின் குறுக்கே கல்லாலான அணையைக் கட்டித் தண்ணீரைத் தேக்கிக் கால்வாய் வழியாக அனுப்பிய முறையினை, எதிர்த்து வரும் வீரர்களைக் கற்சிலை போல் ஒருவனாக நின்று தடுக்கும் தலைவனுக்கு உவமையாகக் கூறுகிறார் தொல்காப்பியர்.

**வருசிறைப் புனலைக் கற்சிலை போல**
**ஒருவன் தாங்கிய பெருமை யானும்**
**(தொல். பொருள். 657)**

சோழநாடு சோறுடைத்து என்ற பெருமைக்குக் காரணமாக விளங்கியவர் கரிகால்சோழன். 1800 ஆண்டுகளுக்கு முன்பே காவிரியின் குறுக்கே பெரிய கருங்கற்களும், களிமண் கலவையும் கொண்டு சுமார் 1080அடி நீளமும், 40 முதல் 80 அடி அகலமும், 15 முதல் 18


**ISBN Number: 978-81-963413-5-0**

அடி ஆழமும் என்ற விகிதத்தில் ஆற்றின் குறுக்கே நாக வடிவில் வளைவாக கல்லணையைக்கட்டி, நீர்ப்போக்கை ஒழுங்கு செய்து தமிழரின் பொறியியல் திறனை உலகுக்கு உணர்த்திய சிறப்பிற்குரியவர் கரிகாலன் என்பதைப் பொருநராற்றுப்படையில் முடத்தாமக்கண்ணியார் பாடல் உணர்த்துகிறது.

**ஏற்றம் ஏற்றத்தினாலும் பிறர்நாட்டு**
**வாரிசுரக்கும் வளன் எல்லாம் தேரின்**
**அரிகாலின் கீழுகூஉம் அந்நெல்லே சாலும்**
**கரிகாலன் காவிரிசூழ் நாடு (பொரு., தனிப்பாடல்)**

இது போன்ற அணைக்கட்டுகள் கற்சிலைகள் என்றழைக்கப்பட்டன. இவை நீரின் வேகத்தையும் அழுத்தத்தையும் கட்டுப்படுத்தும் வகையில் இருந்தமையை,

**வருந்திக் கொண்ட வல்வாய் கொடுஞ்சிறை**
**மீதில் கொடுநீர் போக்கி (அகம்.346:9-10)**

அகநானூற்றுப்பாடல் மூலம் அறியமுடிகிறது.

நீர்த்தேக்கங்களை வளைவாக அமைத்தால் நீரின் வேகம் கட்டுப்படும் என்பதைப் பழங்கால மக்கள் நன்கு அறிந்திருந்தனர். புறநானூற்றில் பாறைகளையும், குவடுகளையும் கொண்டு எட்டாம்நாள் பிறை போன்று வளைந்த குளம் அமைக்கும் கட்டமைப்பினை, “அறையும் பொறையு மணந்த தலைய எண்ணாட் டிங்க ளனைய

 **ISBN Number: 978-81-963413-5-0**

கொடுங்கரைத் தெண்ணீர் சிறுகுள் கீள்வது...'' (புறம். 118) என்ற பாடல் வழி குளத்தைக் கட்டுமான நுட்பத்துடன் கட்டியமை தெளிவாகிறது

**நீரைப்பாதுகாக்கும் கட்டுமான தொழில்நுட்பம்:**

குளங்களில் சேமித்த நீரைப் பயன்பாட்டிற்காக வெளியேற்ற மதகு, மடை, புதவு, குமிழி போன்ற அமைப்புகளை ஏற்படுத்தி இருந்தனர்.

**புதவு**

புதவு என்பது நீர் மோதக்கூடிய இடமாக சங்க இலக்கியங்களில் காட்டப்பெறுகின்றது. புதவு என்பது“தண்ணீர் வெளியேறும் சிறியவழி'' (தமிழகப் பாசன வரலாறு ப.எண். 29) என்று தமிழகப் பாசன வரலாறு குறிப்பிடுகின்றது. இழுமென ஒலிக்கும் புனல் அம் புதவின்'' (புறம் -176-5) இப்புதவின் வழியாக வெளியேற்றப்படும் நீர் ஆனது கால்வாய் மூலம் வேளாண்மைக்கு உதவுகிறது. வெள்ளம் போல பெருகி வரும் தண்ணீரின் அளவைக் கூட்டவோ, குறைக்கவோ முடியாது. எனவே தான் சிறிய கதவு அமைத்துப் பலகையை அடைத்து நீரை வெளியேற்றி வருகின்றனர். புறத்தில் புனல் நீரைப் பாதுகாக்கவே புதவு என்ற ஒன்று போடப்பட்டமை பின்வருமாறு காணலாம். இதனை, “புனலும் புதவின் மிழலையொடு கழனி'' (புறம். 24) என்ற பாடலடி சுட்டுகிறது. இதில் சிறிய அளவு கதவு அமைத்து


**ISBN Number: 978-81-963413-5-0**

வயலுக்குத் தண்ணீர்ப் பாய்ச்சும் நீரியல் மேலாண்மை பதிவாகி உள்ளது. அதாவது குளங்களில் தேங்கும் நீரைப் பாசனம் செய்து சாகுபடி செய்துள்ளமை மற்றொரு பாடல் வழி அறியலாகின்றது. இதே கருத்து, "நிறைக்குளப் புதவின் மகிழ்ந்தனெனாகி" (புறம். 376) என்ற தொடர் வழி பாசனத்திற்கான நீர்நிலை அமைத்து பாதுகாக்கும் தொழில் நுட்பத்தைச் சங்க இலக்கியங்கள் வழி அறியலாம்

**சுருங்கை**

சுருங்கை என்பது பூமிக்கடியில் செல்லும் சிறிய நீண்டக்குழாய். இதனைத் 'தூம்பு' என்றும் அழைப்பர். தூம்பு என்பது தூம்புகை என்றும் பின்னாளில் தும்பிக்கை என்றும் மாறிற்று. யானையின் தும்பிக்கைப் போன்ற அமைப்பைக் கொண்டே தூம்பு குளத்தில் உள்ள நீரை குளக்கரையின் அடிப்பபகுதி வழியாக வெளியே எடுத்துச்செல்ல இந்த தூம்பு பயன்படுகிறது. இந்த தூம்பானது மூங்கில், பனை மரங்களால் வேயப்பட்டு பூமிக்கடியில் சுரங்கவழியில் நீரானது எடுத்துச் செல்லப்பட்டது. சுரங்கத்தின் வழியே சென்றதாலும் கைப்போன்ற அமைப்பைக் கொண்டுள்ளதாலும் இதனைச் 'சுரங்கை' என்று அழைத்தனர். மேற்கண்டப் பாடலில் பெருங்குளத்தின் இருமருங்கில் சுரங்கைச் சிறுவழியாக அமைத்து நீரைப் புகுத்தினர். சுரங்கையின்


**ISBN Number: 978-81-963413-5-0**

பயன் என்னவென்றால் நீரானது குளத்தில் விரைவாக நிரம்பும்போது குளக்கரை உடைந்துப் போகாமல் இருக்கவும், உபரிநீரை வெளியேற்றவும், நீரை பங்கீட்டு முறையில் பகிரவும், குளக்கரைப் பாதுகாப்பாக இருக்கவும், நீர் வீணாகாது தடுக்கவும் இந்த சுரங்கை அமைப்பு முறை பயன்பட்டது. இதுவே தற்போதுள்ள நிலத்தடி நீர்குழாய்களுக்கு முன்னோடியாக இருந்துள்ளது என்று சொன்னால் மிகையாகாது. இவ்வாறு சங்க இலக்கிய மக்கள் அறிவியல் நுட்பத்தின் நீர் மேலாண்மையை கையாண்டு வந்தனர் என்பதை அறிந்து கொள்ளலாம்.

**மதகு**

மதகு தண்ணீர் வெளியே செல்ல கற்களால் வளைவாக அமைக்கப்பட்டிருக்கும். சுண்ணாம்புக் காரையால் தண்ணீர் வேகம் குறைக்கும் படி மதகு அமைப்பதுண்டு. இம்மதகு பற்றி அறிஞர், “நீர்த்தேக்கத்திலிருந்து பாசனத்திற்காகத் திறந்து விடப்படும் நீரின் அளவினை ஒழுங்குபடுத்தப்படும் சாதனம் இது. குளம் (அ) ஏரி கரையின் அடியில் சதுர வடிவ குறுக்கு வெட்டுக் கொண்ட ஒரு நீர்வழிப்பாதை அமைக்கப்படுகிறது. இப்பாதையின் உட்புற முனையில் பல துளைகள் கொண்ட தொட்டி போன்ற பள்ளம் அமைக்கப்படுகிறது. இத்துளைகளின் வழியாக நீர்


**ISBN Number: 978-81-963413-5-0**

பாதைக்குள் சென்று குளத்திற்கு வெளியே பாசனக் கால்வாய்களுக்குச் செல்ல முடியும். இத்துளைகள் நாழிக் கண்கள் எனப்படும். இந்தப் பள்ளத்தில் மேலும் தேவையான அளவிற்கு மூடவோ திறக்கவோ முடியும். எனவே நீர்ப்பாதையின் வழியே திறந்து விடப்படும் நீரின் அளவினைத் தேவையான அளவிற்கு கூட்டவோ குறைக்கவோ முடியும். இவ்வாறு நீர் வினியோகத்தை ஒழுங்குபடுத்துகின்ற அமைப்பிற்கு மதகு என்பர். இம்மதகு மடை, தூம்பு, கலிங்கு என இலக்கியங்களில் அழைப்பர்''. (காலந்தோறும் அறிவியல் தொழில்நுட்பம், ப. 212)

பள்ளங்களில் தேக்கி பாசனம் செய்கிறோம். அக்காலத்தில் நீர்ப்பாசனமாக மதகு, புதவு போன்றவை பயன்படுத்தி உள்ளனர். இதில் மதகு தண்ணீர் வெளியே செல்ல கற்களால் வளைவாக அமைக்கப்பட்டிருக்கும். சுண்ணாம்புக் காரையால் தண்ணீர் வேகம் குறைக்கும் படி மதகு அமைப்பதுண்டு. “மதகு என்பது மடை போன்றே அமைக்கப்படுவது. ஆனால் இதன் கதவைச் சிறுகச் சிறுகத் திறக்கலாம். வெளியேறும் தண்ணீர் அளவைக் கூட்டவோ, குறைக்கவோ முடியும். இது தற்காலத் திருகு மதகு அடைப்பான் என்பதற்கு ஒப்பாகும்.” (தமிழக பாசன வரலாறு, ப. 39) என்ற அறிஞர்கள் கருத்து “கரையொடு கடலிடை வரையொடு


**ISBN Number: 978-81-963413-5-0**

கடலிடை நிரைநிரை நீர்தரு நுரை நுரையுடன் மதகு கொ றிழிதரு புனல்கரை புரளிய'' (பரிபாடல் திரட்டு. 2: 65 - 67) என்பதில் மதகுநீர் சேமிக்கும் கட்டுமான திறன் புதவு போன்றன நீர்நிலையைப் பாதுகாக்க உதவும் கட்டுமானங்கள் நிறைய இன்றளவு கையாளப் பெறுகின்றன.

**நீர் இறைக்கும் பத்தர்**

தொன்றுதொட்டு நீர் இறைப்பதற்குரிய கருவியாகப் பத்தரும், முகவையும் உழவர் பயன்படுத்துவர். முன்பு ஆனிரைகளைப் பாதுகாக்கும் பொருட்டு நீர்ப்பத்தர் அமைத்தனர். பத்தராகிய கேணி நீரைப் பக்கத்துள்ள விடாவில் இட்டுப் பிறவுண்ணாதபடி (விலங்குகள்) ஒருவில் வைத்து மூடிபோட்டுப் பாதுகாத்துள்ளனர். கிணற்றின் மூலமாகப் பாதுகாக்கப்பட்ட குடிநீரை யானை போன்ற பெரிய விலங்குகள் அறிந்து கொண்ட நுட்பத்தைப், ''பயநிரைக்க எடுத்த மணிநீர்ப் பத்தர் புன்தலை மடப்பிடி கன்றோடு ஆர வில்கடித்து ஊட்டின பெயரும்'' (நற்றிணை. 92) என்ற பாடல் வாயிலாக வில்லை இழுத்தால் மூடி திறந்து கொள்ளும் அளவிற்குப் பத்தரின் பொறி அமைப்பு இருந்தமை நற்றிணை வழி அறியப்பெறுகின்றது. இங்கு யானை தனது பிடியும் கன்றும் நீருண்ணுதற் பொருட்டு வில்லையே முறித்து விடுவதாக எடுத்தாளப்பெறுகின்றது.


**ISBN Number: 978-81-963413-5-0**

பத்தல் ஆன நீர்த்தொட்டிகள் ஆக்கள் பருகுவதற்கும் தோண்டப்பட்டுள்ளன. இதனைக், "கல்லாக் கோவலர் கோலிற் றோண்டிய வானீர்ப் பத்தல் யானை வெளவும்" (ஐங்குறுநூறு. 304) என்ற பாடல் வழி நீர்ப்பத்தலைக் கோல் கொண்டு தோண்டியமை ஈண்டு புலனாகிறது. யாழின் உறுப்பு போலச் சிறயதாகத் தோண்டப்படுவதால் 'பத்தல்' என்று அழைக்கப்படுகிறது.

**ஏற்றமாகிய கமலை**

பண்டைய காலத்தில் நீர் இறைக்கும் வாளியாக 'கமலை'யைப் பயன்படுத்தினர். பழந்தமிழ் இலக்கியத்தில் ஏற்றம், பூட்டைக்கிணறு போன்ற நீர் இறைக்கும் சாதனங்கள் உழவிற்குப் பயன்படுத்தி யுள்ளனர். நிலத்தடி நீர் இறைக்கத் துத்தநாகம் பூசிய தகட்டினால் ஆன கமலையினை ஒரு முனைக் கயிற்றாலும், மற்றொரு முனையைக் கிணற்றின் விளம்பில் நிறுத்தி மரக்கம்பத்திலுள்ள கம்பியாகிய பறியுடனும் சேர்த்துக் கட்டியிருப்பர். எருது பூட்டிய கயிறு ஒரு புறம் கீழ்நோக்கிக் கிணற்று நீரை முகந்து வாய்க்காலுக்கு இறைக்கும். மற்றொரு கயிறு எரு வாய்க்காலுக்கும் செல்ல உதவக்கூடிய வகையில் உருளையுடன் இணைக்கப்பட்டிருக்கும். இத்தகு நீர்ப்பாசன முறையினை மதுரைக்காஞ்சி சுட்டுகிறது. இம்முறையினை, "...ஏற்றத் தோடு வழங்கும்

 ISBN Number: 978-81-963413-5-0

அகலாம்பியிற் கயனகைய வயனிறைக்கு மென் தொடை வன்கிழா அர் அதரி கொள்பவர் பகடுபுண் தெண்மணி இரும்புள் ஒப்பும் இசையே…" (மதுரைக்காஞ்சி. 90 - 94) என்ற அடிகளில் எருது கொண்டு நீர் இறைக்கும் ஏற்ற முறையை அறியலாகின்றது. இவ்வோசை பன்றிப்பத்தரின் ஓசைக்கு இணையாக ஒலிப்பதாகக் குறிப்பிடப்படுகின்றது. மேலும், அகத்தில் உப்புவாணிகர் ஏற்றம் கொண்டு நீர் இறைத்தமையை முள்ளியூர்ப்பூதியார் பாடல் வழி அறியலாம். சான்றாக, "…பலபுரி வார்கயிற் றொழுகை நோன்சுவல் கொளீஇப் பகடு துறை ஏற்றத்து…" (அகம். 173) என்ற பாடலடி உணர்த்தும். இதில் ஏற்றம் கொண்டு நீர் இறைக்கும் உழவு நுட்பத்தைக் காணமுடிகிறது.

**நீர் நுட்பவியல் பயன்பாடு**

மணற்கேணி என்பது ஆற்றுமணலில் பறிக்கும் ஊற்று பள்ளமாகும். இப்பள்ளத்தில் எவ்வளவுக் கெவ்வளவு தோண்டுகிறோமோ அவ்வளவுக்கு மணற்கேணியில் நீர் ஊறுகிறது. இதனை வள்ளுவர் உரைக்கையில், "தொட்டனைத்து ஊறும் மணற்கேணி." (குறள். 396) என்ற குறளில் மணற்பாங்கான பகுதியில் நீர்த்தோண்டுவதால் மண்ணிற்கு மென்தன்மையும் இளகும் ஆற்றலும் உண்டு என்ற ஆழந்த கருத்தினை எளிதாகப் பெறமுடிகின்றது. இவ்வூருணியாகிய நீர்


**ISBN Number: 978-81-963413-5-0**

நிலத்தின் அடியிலும், பக்கவாட்டிலும் கசிந்து செல்வது இயல்பாகும். உழவர்கள் பயிர்த்தொழில் செய்வதற்காக இவ்வூருணி அருகே கிணறு தோண்டி குளம், ஏரி மூலம் நீரின் மட்டத்தையும் உயர்த்துவர். இவை மக்கள் உபயோகிப்பதற்கு ஏற்ற பகுதியாக அமைகின்றது. இக்கருத்தினை, ‘‘ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்’’ (குறள். 215) என்ற குறட்பா மூலம் நீரின் மகிமை உணர்ந்தே வள்ளுவர் சுட்டியமை வியப்பிற்குரியதாக அமைகின்றது.

செம்மண் கிணறு முற்காலத்தில் செம்மண் நிலத்தில் மடுவில் கிணறு தோண்டுவர். ஊற்றுநீர் போன்று இவற்றில் சிறிதளவு நீர் ஊற்று கிடைக்கும். அந்நீரை வீணாக்காமல் பெரிய ஜாடிகள் மூலம் சேகரித்து வைக்கும் நுட்பம் அன்றே இருந்துள்ளது. இதனைப், ‘‘பூவிற் படுவிற் கூவற் றொடீஇய செங்கட் சின்னீர் பெய்த சீறில் முன்றி லிருந்த முதுவாய்ச் சாடி யாங்கட் டுண்டென...’’ (புறம். 319) என்ற பாடலடிகள் விளக்கும். இதன் வழி செம்மண் நிலத்தடி நீரைச் சேமிக்கும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நுட்பம் அன்றே இருந்தமை புலனாகிறது. மண்ணும் கிணறும் முன்பு வறண்ட நிலப்பகுதியில் வாழும் உயிரினங்களுக்காக நிலத்தடி நீரைப் பயன்படுத்தினர். விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பிற்கு அந்நிலத்தடி நீர் உபயோகமாகின்றது.

 **ISBN Number: 978-81-963413-5-0**

அக்காலத்தில் கருங்கல் நிறைந்த பாறைகளை உடைத்து கிணறு அமைத்துள்ளனர். இக்கிணற்றில் ஊறும்நீர் நன்னீர் ஆகவும் பயன்படுகின்றது.

பெரும்பாலும், கிணறு அமைக்கையில் களிமண் பிசைந்து அறுத்துக் கல்லாக்கிப் பின் சூளையிலிட்டு (வெப்பமேற்றி) செங்கல்லாக மாற்றிக் கட்டுவர். இத்தகு நிலத்தடி நீர் பெறும் பாதுகாப்புமுறையினை இலக்கியங்கள் குறிக்கின்றன. "கல்லறுத் தியற்றிய வல்லுவர்க் கூவல் வில்லேர் வாழ்க்கை." (புறம். 331) இப்பாடலில் கருங்கல் அறுத்து செய்யும் கிணற்று முறை பதிவாகியுள்ளது. இதே போன்ற கருத்தை (அகம். 79, பெரும்பாணாறு. 97 - 98) இன்ன பிற நூல்களிலும் காணலாம். இக்கிணறு அகலமாக தோண்டப் பெற்றிருப்பது நன்கு புலனாகிறது. களர்நிலத்து ஊறும் உவர் நீரை ஆடை வெளுக்கவும் பயன்படுத்துவது வழக்கமாகும். இதில் மாசினைப் போக்க வல்ல அமிலகாரத் தன்மை இடம் பெற்றிருக்கும். இக்கூற்றை, "களர்ப்படு கூவற் றோண்டி நாளும் புலைத்தி கழீஇய தூவெள் ளறுவை" (புறம். 311) என்ற பாடலடிகள் துணி வெளுக்க உவர் மண் அமைக்கக் கூடிய மண்ணறிவியல் சிந்தனை காணமுடிகின்றது. ஆழ்துளைக்கிணறு (Borewell) ஆழ்துளைக்கிணறு என்பது நிலத்தின் அடிமட்டத்திலிருந்து ஆழமாக நீரை இறைக்கும்


**ISBN Number: 978-81-963413-5-0**

முறையாகும். இக்கிணறுகளில் பெறப்படும் நீரினைத் தொட்டிகளாகவே அமைத்து உழவிற்குப் பயன்படுத்துவர். கொங்குநாட்டார் பாறைப் பாங்கான நிலத்தடியில் தோண்டத் தோண்ட நீர் ஊறும் என்பதை உணர்ந்து இவ்வாழ்குழாய்க்கிணற்று முறையினைக் கையாண்டுள்ளனர். இரும்பினாற் செய்த கோடாரியால் வன்நிலத்தை உடைத்துச் செம்மைப்படுத்தியுள்ளனர். இத்தன்மை குறித்து பதிற்றுப்பத்தில், "பொன்செய் கணிச்சித் திண்பிணி யுடைத்துச் சிரறுசில ஆறிய நீர்வியப் பத்தற் கயிறுகுறு முகவை மூயின மொய்க்கும் ஆகெழு கொங்கர் நாடகப் படுத்த" (பதிற்றுப்பத்து. 3:2) என்னும் பாடலடிகள் வலியுறுத்தும். மேலே, அகலமாக அகழ்வது 'கூவல்' என்றும் அதனுள்ளே குறுகிய வாயுடைத்தாய் ஆழமாய்த் தோண்டப்படும் பத்தலைப் 'பிள்ளைக்கிணறு' என்று அழைக்கின்றனர். இம்முகவை நீரை முகக்கும் கருவி மரத்தாலானது. நீரின் சின்மை குறித்தும், நீரும் மிக்க ஆழத்திலிருப்பது பற்றியும் கூறவே 'குறுமுகவை' என்ற சொல்லை கொங்கு நாட்டார் பயன்படுத்தியுள்ளனர்.

இப்பத்தல் மிக ஆழமாக இருப்பதால் நீண்ட கயிறு கொண்டு முகந்து நீரை இறைக்கலாம். இம்முறைக்கு பழந்தமிழர் 'கயிறுகுறு முகவை' என்றும் பெயரிட்டனர் என்பது புலனாகிறது. இதே கருத்தினை, "கணிச்சியிற்


**ISBN Number: 978-81-963413-5-0**

குழித்த கூவல் நண்ணி ஆன்வழிப் படுநர் தோண்டிய பத்தல் யானை இனநிரை வெளவும்" (நற்றிணை. 240) என்னும் பாடலடிகள் வாயிலாக ஆனிரை மற்றும் யானைகள் நீரை உண்ண வேண்டி ஆழ்துளைக்கிணறு பயன்படுத்தியமை நற்றிணையில் புலனாகிறது. நீர்ஊறும் பகுதியைத் தேர்ந்தெடுத்து கிணற்றை வெட்டுவதும், நீரைப் பெருக்குவதுமான சிந்தனை எதிர்கால சூழலியல் நுட்பத்திற்கு சான்றாக அமைகின்றது. பழமொழியில் ஆழ்துளைக் கிணற்றிலிருந்து நீரை இறைத்தலும் அவை மீண்டும் மீண்டும் நீர் சுரக்கும் என்ற அறிவியல் கூற்றினை (பழமொழி. 344) என்ற பாடல் வழி அறியலாம். இதுவும் ஓர் சுற்றுச்சூழல் பாதுகாப்பு முறையாகும்.

குளங்கள் அமைப்பும் பாதுகாப்புமுறையும் சிறு குளங்கள் நீர் நிரம்புங் காலத்து அதன் கரைகளைப் பாதுகாப்பது கடமையாகும். நீர்த்துறையினைப் பாதுகாக்கும் பணியை காவலர்கள் ஏற்றமை, "…சிறுகோட்டுப் பெருங்குளங் காவலன்…" (அகம். 252) என்ற பாடலடிகள் உணர்த்தும். இதன் வழி குளத்துநீரைப் பாதுகாக்க காவலர் தனியாக அமைக்கும் நுட்பத்தைக் காணமுடிகிறது.

**நீர்நிலைகளை அளவிடும் கருவி**

ஓடக்கோல் சோழர் காலத்தில் நீர்நிலைகளை அளவிடும் கருவிகள் கண்டறியப் பெற்றுள்ளன.

 ISBN Number: 978-81-963413-5-0

அவற்றுள் ஓடக்கோல் ஒன்றாகும். இக்கருவி வெள்ள நீரை அறிய உதவுகின்றது. தித்தனது நெல் வளமிக்க பகுதியில் செல்கையில் ஓடக்கோல் மறையும் வண்ணம் நீர்ப் பெருகியதாகப் பரணர் பாடியுள்ளார். இக்கூற்றை, “மழைவளந் தரூஉ மாவண் தித்தன் பிண்ட நெல்லின் உறந்தை யாங்கண்” (அகம். 6) என்ற பாடலின் வழி காவிரியின் நீர்ப்பெருக்கு அளவிட உறந்தையூர் மக்கள் ஓடக்கோல் பயன்படுத்தியமை உணர முடிகிறது. மற்றொரு பாடலில் கடலோடு சேரும் காவிரி நீரை அளக்க உதவும் ஓடக்கோல் மறையும் நீர்சென்ற காட்சியை (அகம். 123) என்ற அகப்பாடல் விளம்புகிறது.

**அணைக்கட்டும் நீர் மேலாண்மை**

அணைக்கட்டும் முறை அணைகள் போன்ற நீர்த் தேக்கங்கள் நீரைச் சேமிக்க உதவுகின்றது. பண்டைய காலத்தில் காட்டாற்று நீர் மிகுந்த வேகத்துடன் பாயும் போது மண்ணை வாரிக் கொண்டு மணல் மேட்டில் பரப்பும். அதோடு வண்டல் மண், இலை மக்குகள் மரங்கள் ஒருசேர அடித்துச் செல்லப்பெறும். இச்சமயத்தில் பேரியாற்றின் வெள்ளப்பெருக்கைத் தடுக்க முன்பு அணையைக் கட்டி பாதுகாத்துள்ளனர்.

சோழ மன்னனான கரிகாலன் கி.பி முதலாம் நூற்றாண்டில் கல்லணை கட்டியமை வரலாற்றுச் சான்றாக இன்றளவும் குறிப்பு உள்ளது. மணற்பாங்கான

 **ISBN Number: 978-81-963413-5-0**

படுகையில் ஆற்றுநீரைத் தடுக்க கரிகாலன் கட்டிய அணைநீர்ச்சேமிப்புத் திட்டம் மகத்தானது எனலாம். இது பற்றி பழ. கோமதிநாயகம், “ஆற்றுமணல் படுகையில் மிகப் பெரிய பாறை போடப்பட்டது. பாறைக்கு அடியில் உள்ள மணல் ஆற்றுநீரால் அரித்து இழுத்துச் செல்லப்பட்டதால், பாறை மெதுவாக மணலுக்குள் புதைந்தது. அதன் மேல் களிமண்ணைப் பரப்பிவிட்டு மற்றொரு பெரிய பாறை வைக்கப்பட்டது. இப்போது அடியில் உள்ள பாறை மேலும் ஆழத்திற்குள் புதையும். இப்படி ஒன்றன் மேல் ஒன்றாகப் பெரிய பாறைகளை அடுக்கிப் புதைத்திருந்தனர். மணல் பகுதி முடிந்து கடினப் பகுதி வந்ததும் கீழ்மட்டத்தில் உள்ள பாறை இறங்காது. இப்படித்தான் ‘கல்லணை’ கட்டப்பட்டிருந்தது” (தமிழக பாசன வரலாறு, ப. 59-60) என ‘சர் ஆர்தர் காட்டன்’ என்ற அறிஞர் கூறியதாகப் பழந்தமிழரின் பாசனப்பொறியியல் நுட்பம் பொருளாதாரத்தைப் பெருக்கவும், காவிரி ஆற்றின் நீர்ப்போக்கைக் கட்டுப்படுத்தவே கல்லணை கட்டியதாகக் கருதப் படுகிறது. இக்காவிரி கொள்ளிடத்திற்கு இடையே கல்லணை நில அமைப்புடன் கட்டியதாக ஆய்வாளர் கருதுவர். இது பற்றி மற்றொரு சாரார் கூறுகையில், “காவிரி ஆற்றின் போக்கில் திருவரங்கத் தீவிற்கு முன்புள்ள பகுதி அகண்ட காவிரி எனப்படும். அந்த

 **ISBN Number: 978-81-963413-5-0**

இடத்தில் காவிரி இரண்டாகப் பிரிகிறது. பிரிந்த ஆற்றிற்குக் கொள்ளிடம் என்று பெயர். இந்த இடத்தில் காவிரி ஆற்றின் நிலமட்டத்தை விட சுமார் 6அடி உயரத்தில் கொள்ளிடம் ஆற்றின் நிலமட்டம் இருக்கும். இந்த நிலையில் ஆற்றில் வரும் வழக்கமான அளவு தண்ணீர் காவிரியிலேயே செல்லும். அதிக வெள்ளம் வரும்போது அதிகப்படியான நீர் கொள்ளிடம் வழியாகச் செல்லும். காவிரியில் வெள்ளம் வந்தால் கொள்ளும் இடம் கொள்ளிடம் எனப் பெயர் பெற்றது போலும்.

கொள்ளிடம் வெள்ள நீரைக் கொண்டு செல்லும் ஆறாக இருப்பதால் அதன் நிலச் சாய்வு அதிகமாக இருக்கும் "…இதன் காரணமாகத் தான் மிகத் துணிச்சலுடன், இயற்கையை எதிர்த்து, கரிகாலன் இந்த மகத்தான சாதனையைப் புரிந்திருக்கிறான்" (பழ.கோமதி நாயகம்., தமிழக பாசன வரலாறு, பக. 57 - 58) எனக் கருதுவர். இதில் கற்பாறைகளால் அமைக்கப்பெறும் கல்லணை இயற்கை பேரழிவில் இருந்து பாதுகாக்கவே கட்டியமை பாராட்டுதற்குரியது. இதே போன்ற கருத்து மதுரைக்காஞ்சி, பரிபாடல், பதிற்றுப்பத்து, புறநானூறு போன்றவற்றிலும் கல்லணை குறித்து பேசப்படுகிறது.

"குமிழி என்பது குளங்களிலிருந்து தண்ணீர் வெளியேற கல்லால் ஆன பெட்டியொன்றை அமைத்து அதில் துளையிட்டு அதன் வழியாகத் தண்ணீர் புகுந்து


**ISBN Number: 978-81-963413-5-0**

வெளிவரும் அமைப்பு. மரத்தால் செய்யப்பட்ட சக்கை மூலம் இக்குமிழியின் துளையை அடைப்பார்கள். குமிழியின் துளைவாயாகத் தண்ணீர் போகும் போது ஒரு சுழல் உண்டாகும்.'' (தமிழக பாசன வரலாறு, ப.40) என வரும் பழ. கோமதிநாயகம் கருத்தை "வனைகலத் திகிரியிற் குமிழி சுழலும்'' (மலைபடுகடாம். 474) என்ற தொடர் சுட்டுகிறது. இங்கு குழாயின் துளை வழியாக வெளியேறும் தண்ணீர்ச் சுழற்சி முறையைப் போன்று மட்கலம் சுழல்வதாக உவமிப்பது சிறப்பானதாகும். இக்குமிழிகள் ஆழமாக மடுக்கள் பொருந்திய முடுக்கரை போல் காணப்பட்டதாக (மலைபடுகடாம் - 213) என்ற அடிகள் வழிமொழிகின்றது. இதன் வழி குளத்தின் ஆழம் மிகுதியாக இருக்கும் என்பது புலனாகிறது. தற்போது நீர்நிலைகளில் பிளாஸ்டிக் குழாய்கள் கொண்டு அமைக்கின்றோம். ஆனால், பழந்தமிழர்கள் இயற்கையான கற்பாறைகள் கொண்டு அமைக்கும் சூழலியல் பாதுகாப்புணர்வு நம்மை வியக்க வைக்கிறது. மூங்கில் குழாய் தற்காலத்தில் குடிநீர் பெற நிலத்தடி நீரைத் தோண்டிக் குழாய்கள் உபயோகிக்கப் பெறுகின்றது. உவர்நீரைக் கூட நன்னீராக மாற்றுமளவில் நவீன அறிவியல் சாதனங்கள் கண்டறியப் பெற்றுள்ளன. இரும்பு, பிளாஸ்டிக், ரப்பர் உள்ளிட்ட அனைத்துக் குழாய்களும் தண்ணீர் பெற உதவுகிறது.

 **ISBN Number: 978-81-963413-5-0**

இதனால் மண்பாண்டங்கள் உள்ளிட்ட கைத்தொழில் வளர்ச்சி நலிவடைகின்றது. தூய்மை நலன்கருதி மூங்கிலால் ஆன குழாய்கள் கொண்டு நிலத்தடி நீரைப் பழந்தமிழர் பயன்படுத்தியமை, "வினையமை வரனீர் விழுத்தொடி தத்தக் கமஞ்சூல் பெருநிறை தயங்க முகந்து கொண்டு…." (அகம். 383) என்பதில் தூம்பாகச் செய்யப்பட்ட மூங்கில் குழாய்கள் வழியாகத் தண்ணீர் விழும்படி பெரிய சீரால் கட்டப்பட்டமையை அறியமுடிகின்றது.

**கல்வெட்டுச் செய்திகள்**

இலக்கியச் சான்றுகளுக்கு அடுத்தப்படியாக அரசர்கள் நீர் ஆதாரங்களை உண்டாக்கி தங்கள் பெயரினைப் பொன் எழுத்தில் பொறித்து வைத்ததைச் செப்பேடுகளும் கல்வெட்டுகளும் விளக்குகின்றன. செப்பேடுகளில் புகழ்பெற்ற கூரம் செப்பேட்டில் 'முதலாம் பரமேசுவரமங்கலம் என்னும் பெயரில் பிரமதேயமாக நிலம் கொடுத்தான். அத்தோடு அவ்வூரில் பரமேசுவர தடாகம் என்னும் ஏரியை ஏற்படுத்திப் பாலாற்றில் இருந்து நீர் கொண்டு வர பெரும்பிடுகு கால் என்னும் கால்வாயையும் வெட்ட, அக்கால்வாயிலிருந்து தலைவாய், தலைப்பேழை, ஊற்றுக்கால் என்னும் கிளையையும் வெட்டிக் கொள்ள அனுமதி அளித்தான் பரமேசுவரன்' என்று எடுத்துரைக்கின்றது.

 **ISBN Number: 978-81-963413-5-0**

மகேந்திரவாடிக் கல்வெட்டு மகேந்திர தீர்த்தம் என்ற குளத்தைப் பற்றிய செய்தியினைக் கூறுகிறது.

உத்திரமேரூரின் ஜீவநாடியாக அமைந்தது வயிரமேகத் தடாகம். பல்லவ மன்னன் நந்திவர்மனுக்கு வயிரமேகன் என்ற சிறப்புப் பெயர் உண்டு. இப்பெயரால் அமைந்ததுதான் வயிரமேகத் தடாகம் என்னும் ஏரி என்று உத்திரமேரூர் செப்பேடுகளும் கல்வெட்டுகளும் கூறுகின்றன. கங்கை கொண்ட சோழபுரத்தில் மாமன்னன் இராசேந்திர சோழன், சோழ கங்கன் என்ற தன் பட்டப் பெயரால் சோழ கங்கன் என்ற ஏரிரைய உருவாக்கினான். இது இன்று **'பொன்னேரி'** என்று அழைக்கப்படுகிறது. அந்த ஏரியின் வடிகாலாக தனது சிறப்புப் பெயரான வீரநாராயணன் என்ற பெயரில் **வீரநாராயண ஏரி** என்ற பெயரில் உருவாக்கினான். இன்று 'வீராணம் ஏரி' என்று வழங்கப்படுகிறது.

இதுகாறும் பொருளாதாரத்தை உயர்த்துவதில் வேளாண் தொழிலே பெரும்பங்கு ஆற்றுகின்றது என்பதை உணரலாம். நீரைக் கூட்டிக் குறைக்கவும், கதவுகொண்டு நீர் வெளியேற்றவும் மதகு, புதவு போன்ற கருவிகள் பயிர்ப் பாசனத்திற்கு உறுதுணையாக உதவுகின்றது. கரிகாலன் கட்டிய கல்லணை பாறை இறுகும் அளவு களிமண் பரப்பி கட்டியதால் எதிர்காலவியல் நீர்ச் சேமிப்புத் திட்டத்திற்கு வழி


**ISBN Number: 978-81-963413-5-0**

கோலுகின்றது. 'மழைநீர் உயிர்நீர்' என்னும் மொழியை அரசாங்கம் முரசறைந்து அறிவிக்கின்றது. ஆனால் அன்று ஊரின் நடுவே குளம் அமைத்து நீர் சேமித்து உண்ணும் நீராக்கினர். ஏரில் நீர் தேக்கி ஏர்த்தொழிலுக்குப் பயன்படுத்தினர். இத்தகைய நீர்மேலாண்மைத் திறன் சங்க இலக்கியங்களில் பதிவாகி உள்ளமையை அறிய முடிகின்றது.

## துணை நின்ற நூல்கள்

[1] அகத்தியலிங்கம், ச. *வளர்தமிழில் அறிவியல்.* அனைத்திந்திய அறிவியல் தமிழ்க்கழகம், தஞ்சாவூர், 1989.

[2] கோமதிநாயகம், பழ. *தமிழகப் பாசன வரலாறு.* பாவை பப்பிளிகேஷன்ஸ், சென்னை, 2010.

[3] சுந்தரம், இராம. *காலந்தோறும் அறிவியல் தொழில்நுட்பம்.* அனைத்திந்திய அறிவியல் தமிழ்க்கழகம், தஞ்சாவூர், 1992.

[4] சிராஜ் உன்னிசா நாசர்., (தொ.ஆ). *தமிழ் இலக்கியத்தில் அறிவியல்* சிந்தனைகள், வானதி பதிப்பகம், சென்னை, 2003.

[5] நாராயணசாமி ஐயர். *சங்க இலக்கியங்கள் தொகுப்பு.* சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், திருநெல்வேலி, 1962.

 **ISBN Number: 978-81-963413-5-0**

# தமிழர்களின் மாண்பும் அயலகத் தொடர்பும்

**முனைவர் க. புவனேஸ்வரி,** உதவிப்பேராசிரியர்,
தமிழாய்வுத்துறை, தேசியக்கல்லூரி, திருச்சி.

**முகவுரை**

பழங்காலத்தில் தமிழர்கள் அறவழியில் பொருளைத் தேடி இன்பமடைந்தனர். அப்படிப் பொருள் தேடுவதற்காகப் பல வெளிநாடுகளுடன் தொடர்பு கொண்டிருந்தனர். இதனால் வாணிபம் பெருகியது. பிறநாடுகளில் உள்ள மக்களிடம் தமிழரின் பண்பாடு, கலாச்சாரம் போன்றவை சென்று சேர்ந்தது. அந்நாட்டவரின் பண்பாட்டுக் கூறுகளும் நம்மிடம் நிலை கொண்டன. இப்படி அயல்நாட்டவர்க்கும் தமிழ் நாட்டவர்க்கும் ஓர் இணைப்புப் பாலமாகத் திகழ்ந்தது வணிகமேயாகும். அந்த வணிகத் தொடர்பின் மேன்மைகள் குறித்தும் தமிழர்களின் மாண்புகள் பற்றியும் இக்கட்டுரையில் ஆய்வோம்.

**தமிழர் மாண்பு**

நம்வீடு, நம்பெண்டு, நம்பிள்ளை என்று தன்னைப் பற்றியும், தன் குடும்பத்தைப் பற்றியுமே சிந்திக்கும் குறுகிய மனப்பான்மை என்றுமே தமிழர்களுக்கு இருந்ததில்லை. எப்போதுமே நாட்டின் நலன், சமுதாய

 **ISBN Number: 978-81-963413-5-0**

முன்னேற்றம், உலக ஒருமைப்பாடு என்றே எண்ணி வாழ்ந்த ஒப்பற்ற உயர்ந்த இனம் தமிழினம்.

**தமக்கென முயலா நோன்தாள்**
**பிறர்க்கென முயலுநர் உண்மையானே**
**(புறநானூறு, பா. 182)**

என்னும் புறநானூற்றுப் பாடலுக்கு இலக்கணமாக வாழ்ந்தவர்கள் தமிழர்கள். எப்போதும் பிறர்நலன் பேணும் தன்மை அவர்களது வழக்கமாக இருந்துள்ளது.

**ஆ! ஆ! வென்று எழுந்தது பார்**
**யுகப் புரட்சி (பாரதியார் கவிதைகள், ப. 52)**

என்று ருஷிய நாட்டு விடுதலைக்கு பராசக்தி கண் வைக்கவேண்டும் என்றும், பிஜித்தீவில் கரும்புத் தோட்டத்தில் அல்லல்படும் தமிழர்களுக்காக இங்கிருந்து ஓங்கிக் குரல் கொடுத்து, அவர்களின் அவலம் தீர்க்க முயன்றதும், "சிங்களத் தீவினுக்குப் பாலம்" அமைத்திட வேண்டும் என்று பாரதி பாடியதும், உலக நலன் பேணும் உயரிய சிந்தனையில் விளைந்தவைதான்.

**உலகம் எனும் சொல்**

இறைவனிடம் இறைஞ்சும் போதும், இயற்கையைப் பணியும்போதும் உலக நன்மையை நாடிய இனம் தமிழினம். "ஆதிபகவன் முதற்றே உலகு" (திருக்குறள், குறள் – 1) என்று வள்ளுவன் தன் குறளைத் தொடங்கியதும் "உலகு" எனும் சொல்லில்தான்.

 **ISBN Number: 978-81-963413-5-0**

**உலகம் யாவையும் தாமுள ஆக்கலும்**

**(கம்பராமாயணம், பா. 1)**

**உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்**

**(பெரியபுராணம், பா. 1)**

**உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு**

**(திருமுருகாற்றுப்படை, பா. 1)**

**வையத்துள் வாழ்வீர்காள்**

**(திருவெம்பாவை, மாணிக்கவாசகர், பா.2)**

இப்படி "உலகம்" "வையம்" என்று உலகத்தின் நன்மைக்காகவும், உலகம் ஏற்றம் பெறவும் பாடப்பெற்றவையே தமிழ் இலக்கியங்கள். அதற்கு எடுத்துக்காட்டாகத்தான் பல இலக்கியங்களில் "உலகு", "உலகம்" "வையம்" போன்ற சொற்கள் இடம்பெற்றுள்ளன. இப்படி உலகத்தில் உள்ள அனைவரையும் நல்ல நிலையில் வாழச் செய்து, தன்னையும் அதற்கேற்ப உயர்த்திக் கொண்டு உலக அரங்கில் புகழ்பெற்றவர்கள் தமிழர்கள்". அதற்குப் பாலமாகத் திகழ்ந்தது வணிகம்.

**வணிகத்தொடர்பு**

**திரைகடல் ஓடியும் திரவியம் தேடு (கொன்றை வேந்தன், பா. 39)**

என்னும் மொழிக்கு ஏற்பத் தமிழர்கள் நாடுவிட்டு நாடு கடந்து சென்று பொருள் ஈட்டினர். பண்டைக் காலத்தில்


**ISBN Number: 978-81-963413-5-0**

பல்வேறு அயல்நாடுகளுடன் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். இதற்கான சான்றுகளை நாம் சிலப்பதிகாரம், மணிமேகலை, சங்க இலக்கியங்கள் என்று பலவற்றிலும் காணமுடிகிறது.

**அயல்நாட்டுக் குறிப்புகள்**

பழங்காலத்தில் தமிழர்கள் மேற்கே கிரீஸ், கிரேக்கம், ரோம், எகிப்து முதல் கிழக்கில் சீனா வரையில் வாணிபம் செய்துள்ளனர். மெசபடோமியா, பாபிலோனியா போன்ற மேலை நாடுகளுடனும் ஏற்றுமதி, இறக்குமதி செய்து வந்தனர். நம் தமிழ்நாட்டில் இருந்து வாசனைப் பொருட்களான ஏலம், இலவங்கம், இஞ்சி, மிளகு போன்றவற்றுக்கு வெளிநாடுகளில் மிகுந்த மதிப்புக் காணப்பட்டது. “உப்பொடு வந்து கறியொடு பெயரும்” (அகநானூறு, பா.149). கறி என்பது கருப்பு நிறமுடைய மிளகைக் குறிக்கும். “மேலைக் கடல் முழுதும் கப்பல் விடுவோம்” (பாரதியார் கவிதைகள், ப.75) என்று பாரதி தன் பாடலிலே மேலை நாடுகள் அனைத்திற்கும் நம் இந்தியக் கப்பல்களை அனுப்புவோம் என்று பாடினான். ஆனால் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சேரநாட்டின் தந்தங்களும், மயில் தோகைகளும் இஸ்ரேல் அரசனான சாலமனுக்குப் பரிசாக வழங்கப்பட்டுள்ளது என்று அயல்நாட்டவர் பலர் எழுதிய குறிப்புகளின் வாயிலாகத் தெரிகின்றது. தென் அரேபியா நாட்டு அரசி,

 ISBN Number: 978-81-963413-5-0

சாலமனுக்குப் பரிசுப் பொருளாக ஏலக்காய், இலவங்கம் போன்றவற்றை வழங்கிய செய்தி பழைய ஏற்பாட்டில் காணப்படுகின்றது.

**யவனர்களுடன் தொடர்பு**

கிரேக்கம், ரோமாபுரி போன்ற நாடுகளில் இருந்து தமிழகத்துக்கு வந்த வணிகர்களை "யவனர்" என்று பழந்தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. "யவனர் தந்த வினைமாண் நன்கலம்" (அகநானூறு, பா.149) எனும் அடிகளால் யவனர்களுடனான வணிகத் தொடர்பு புலனாகும். இந்த யவனர்களைத் தங்கள் மெய்க்காப் பாளர்களாகவும், உலோக – தச்சு வேலை செய்பவர்களாகவும் அரண்மனையில் அரசர்கள் பணி அமர்த்தி இருந்ததை முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை போன்ற பழந்தமிழ் இலக்கியங்கள் உரைக்கின்றன.

> **யவனர் இயற்றிய வினைமாண் பாவை**
> **அகல் நிறைய நெய் சொரிந்து (நெடுநல்வாடை, பா.101-102)**

என்று நெடுநல்வாடை குறிக்கின்றது.

**சிலப்பதிகாரம் காட்டும் வணிகம்**

சிலப்பதிகாரத்தில் உள்நாட்டு, வெளிநாட்டு வணிகர்கள் பற்றியும், அவர்கள் விற்பனை செய்த பொருட்கள் பற்றியும் சிலப்பதிகாரத்தில் இளங்கோ பட்டியலிட்டுக் காட்டுகின்றார். காவிரிப்பூம்பட்டிமானது

 **ISBN Number: 978-81-963413-5-0**

மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம் என்று இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இதில் மருவூர்ப் பாக்கத்தின் நீர்த்துறையின் பக்கங்களில் யவனர் எனப்பட்ட கிரேக்க நாட்டு வணிகர்கள் வாழ்ந்தனர் என்றும், அவர்களிடம் அளவற்ற செல்வங்கள் காணப்பெற்றன என்றும் கூறப்பட்டுள்ளது.

> **கடிமதில்வாயில் காவலிற் சிறந்த**
> **அடல்வாள் யவனர் (சிலப்பதிகாரம்,**
> **ஊர்காண்காதை, பா.65-66)**

தங்களிடம் உள்ள பொருள்களை அவர்கள் விலை கூவி விற்பதுடன், காவல் பணியிலும் ஈடுபடுத்தப்பட்டனர் என்பதை நாம் அறிகின்றோம்.

> சங்ககாலத்தில் காவிரிபூம்பட்டினத்தில் பல நாட்டு வணிகர்களும் வந்து தங்கி ஒன்றுபட்டு உழைத்தனர் (சிலப்பதிகார நெறி, ப. 15)

என்று கூறுவதால் யவனர்கள் மட்டும்மின்றிப் பல்வேறு வெளிநாட்டவர்களும் காவிரிபூம்பட்டினத்தில் கடல்வழி வணிகம் செய்ததை அறியலாம்.

**இருப்பிடம்**

வெளிநாட்டவர்க்கு என்று தனியாகப் பழந்தமிழகத்தில் இருப்பிடங்கள் காணப்பட்டன. அவர்கள் அங்கே தங்கித் தங்கள் வாணிகத்தைப் பெருக்கினார்கள்.

 **ISBN Number: 978-81-963413-5-0**

**காண்போரைத் தடுக்கும் பயனறவு அறியா யவனர் இருக்கை (சிலப்பதிகாரம், இந்திரவிழவூர் எடுத்த காதை, பா.9-10)**

காவிரிப்பூம்பட்டினத்தின் கடற்கரையை ஒட்டி வெளிநாட்டவரான யவனர்கள் தங்கிக் கொள்ள தனியாக இருப்பிடம் அமைந்திருந்தது. அது பார்ப்போரை மனம் மயக்கும் வண்ணம் அழகாகவும் நேர்த்தியாகவும் அமைந்திருந்ததாக இளங்கோவடிகள் கூறுகின்றார்.

"வந்தாரை வாழ வைக்கும் தமிழகம்" எனும் மொழிக்கு ஏற்ப வெளிநாட்டில் இருந்து வந்து தங்குபவர்களுக்கும் சிறப்பான இருப்பிடங்களை நம் முன்னோர்கள் அமைத்திருந்தனர் என்பதை அறியும் போது தமிழர்களின் மாண்பை எண்ணி மனம் மகிழ்கின்றது.

**பட்டினப்பாலை**

பழந்தமிழகத்துறைமுகங்கள் இரவு, பகல் பாராமல் இயங்கி வந்துள்ளன. கரிகாற்பெருவளத்தானின் வணிகத் தலைநகராக விளங்கிய காவிரிப்பூம்பட்டினம் பற்றிப் பட்டினப்பாலை பேசுகிறது. "புலி பொறித்து புறம் போக்கி" (பட்டினப்பாலை, பா.192) காவிரிப்பூம்பட்டினம் எனப்படும் பூம்புகாரில் இறக்குமதி, ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களின் மீது சோழர்களின் புலிச்சின்னம் பொறிக்கப்பட்டது என்பதும் தமிழர்கள்


ISBN Number: 978-81-963413-5-0

கடல் கடந்து வணிகம் செய்தமையால் பல்வேறு நாடுகளின் மொழிகளையும் கற்றுணர்ந்திருந்தனர் என்பதும் நமக்குத் தெற்றெனப் புலனாகின்றது. "ஈழத்துணவும் காழகத் தாக்கமும்" (பட்டினப்பாலை, பா.188) துறைமுகத்தில் பல்வேறு நாடுகளில் இருந்து கொண்டுவரப்பட்ட பொருட்களின் பட்டியலைக் கூறும்போது, மேருமலை, மேற்குமலை, கிழக்குக் கடற்கரை மட்டுமின்றி ஈழம் எனப்படும் இலங்கையும் காழகம் அதாவது கடாரம் எனப்படும் இன்றைய மலேசியாவிலிருந்தும் பொருட்கள் ஏற்றுமதி இறக்குமதி செய்யப்பட்டன என்பதை உணர்ந்தின்புறுகிறோம். அதுபோலவே மாமன்னன் இராஜராஜனைப் பற்றிப் படிக்கும்போது அவனிடம் வலிமை வாய்ந்த கப்பற்படை இருந்த செய்தியையும், அதைக் கொண்டு தமிழகத்தின் நிலப்பரப்பை அவன் விரிவுபடுத்தியமையும் நம்மால் அறிய இயலும்.

**முடிவுரை**

இப்படித் தானும் வாழ்ந்து, உலகின் பிற மனிதர்களையும், பிற இனத்தவரையும் வாழ வைத்தவன் தமிழன். அவனது சிந்தனையைச் செயலாக்க உதவியது பிற நாடுகளுடன் அவன் கொண்ட வணிகத் தொடர்பு என்பதும் பல்வேறு பொருட்களை ஏற்றுமதி இறக்குமதி செய்ததன் வாயிலாக அயலாரது கலாச்சாரம், பண்பாடு,


**ISBN Number: 978-81-963413-5-0**

மொழி போன்றவற்றைத் தான் அறிந்து கொண்டு நம்மவரின் பெருமைகளை, மாண்புகளை உலகறியச் செய்ததால் தான் தமிழரினம் இன்றும் தலைநிமிர்ந்து வாழ்கின்றது என்று சொன்னால், அது உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை என்று இவ்வாய்வின் வாயிலாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

**துணைநூல் பட்டியல்**


[1] இரத்தினசபாபதி (உரை). *திருவெம்பாவை.* அருள்சுடர் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 1998.

[2] கோபாலகிருஷ்ணமாச்சாரியார், வை. மு., (உரை). *கம்பராமாயணம்.* உமா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2006.

[3] சாமிநாதய்யர், உ.வே., (உரை). *புறநானூறு.* பாரதிநிலையம், சென்னை, முதற்பதிப்பு, 1958.

[4] சுப்பிரமணியன், ச. வே. (உரை). *பத்துப்பாட்டு மக்கள் பதிப்பு.* கோவிலூர் மடாலயம், கோவிலூர், முதற்பதிப்பு, 2003.

[5] சோமசுந்தரம், பொ.வே., (ப.ஆ). *அகநானூறு.* சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, திருத்திய பதிப்பு, 1980.


 **ISBN Number: 978-81-963413-5-0**

[6] பிள்ளை, கே.கே., *தமிழக வரலாறும் பண்பாடும்.* உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, முதற்பதிப்பு 2013.

[7] வரதராஜன் (உரை). *திருக்குறள்.* திருவள்ளுவர் நிலையம், திருச்சிராப்பள்ளி, முதற்பதிப்பு, 1954.

[8] விசுவநாதன் (உரை). *பாரதியார் கவிதைகள்.* பூம்புகார் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 1998.

 **ISBN Number: 978-81-963413-5-0**

# பக்தி இயக்கத்தில் ஆழ்வார்கள்

**பொன். கனகா,** உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
வ.உ.சிதம்பரம் கல்லூரி, தூத்துக்குடி.

**முன்னுரை**

தமிழில் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு இலக்கியங்கள் தோன்றி வளர்ச்சி பெற்று வருகின்றன. அவ்வகையில் பல்லவர் காலகட்டத்தில், எழுந்த இலக்கியங்களாக பக்தி இலக்கியங்கள் விளங்குகின்றன. சமணம் பௌத்தமும் மன்னர்கள் ஆதரவால் குறிப்பிடத் தகுந்த வெற்றிகள் பெற்றதால், சைவ வைணவ மதங்கள் வீசியுற்றன. இந்நிலையில் வைணவ சமயக் குறவர்களான ஆழ்வார்கள், கடவுள் சார்ந்த அன்பு நெறியைப் பரப்பும் உருக்கமான பாடல்களைப் புனைந்தனர். அப்பாடல்கள் வழி பக்தி இயக்கங்கள் வளர்ச்சி பெற ஆழ்வார்கள் ஆற்றிய பங்கினை ஆராய்ந்து வெளிக்கொணர்வது இவ்வாய்வின் நோக்கமாகும்.

**பக்தி**

பக்தி என்ற சொல் அன்பைக் குறிக்கும். அன்பே, பக்தி, பிரியம், கருணை, இரக்கம், தயை, பச்சாபதாபம், காதல், இச்சை, ஆசை எனப் பல பொருள்களில் வழங்க பெற்று வருகின்றது. “*‘பக்தி’ என்ற சொல் பல்வேறு*


**ISBN Number: 978-81-963413-5-0**

*காலங்களில் பல்வேறு பொருள்களைப் பெற்று வந்துள்ளச் சொல்லாகும்.அது தனிப்பட்ட ஒரு கருத்தைச் சுட்டாமல் பல்பொருள் தொகுதியையும், சமயக் கோட்பாட்டையும் குறிப்பிடுகிறது என்பர்''* (வைணவத்தின் தோற்றமும் வளர்ச்சியும், ப. 178). *''எல்லாவற்றுக்கும் மேலாகிய தெய்வத்தின்பால் செலுத்தப்படும் தூய அன்புணர்ச்சியே பக்தி என்று பகவத் கீதை குறிப்பிடுகிறது''* (வைணவத்தின் தோற்றமும் வளர்ச்சியும், ப. 182). எனவே பக்தி என்ற சொல்லுக்கு இறை அன்பு என்பதே பொருள் என எடுத்துக்கொள்ள முடிகிறது.

**பக்தி இயக்கமும் ஆழ்வார்களும்**

பக்தி இயக்கத்தின் செயல்பாடுகளை இரண்டு பெரும் பிரிவுக்குள் அடக்கலாம். அவை புறச்சமய கண்டனம் மற்றும் அகச்சமய நெகிழ்ச்சி. ஆழ்வார்களும் நாயன்மார்களும், சமண பௌத்த மதங்களை வீழ்த்த, பிற சமயக் கண்டனங்களைத் தம் பாசுரங்கள் மூலம் மக்களுக்கு அறிவுறுத்தினர். பக்தி இயக்கத்தால், வைதீக சமயத்தின் மறுமலர்ச்சியை ஏற்படுத்த முனைந்தனர். சூழலுக்கு ஏற்ப வைதீக மதக்கொள்கைகளை வகுத்துக் கொண்டு, இசைப்பாடல்கள் மூலம் மக்களிடையே எடுத்துரைத்தனர். சுய சமய நெகிழ்ச்சியாக, சாதித்

 **ISBN Number: 978-81-963413-5-0**

தளர்ச்சிக் கொள்கையை ஏற்று, எல்லோரும் ஓர் குலம் என்ற ஒருமைப்பாட்டை வலியுறுத்தினர்.

**முதல் ஆழ்வார்கள்**

முதல் ஆழ்வார்கள் கி.பி 300 முதல் கி.பி 500க்கு இடைப்பட்ட காலத்தைச் சார்ந்தவர்கள். இது தொடக்ககாலப் பல்லவர்களின் ஆளுகைக்கு உட்பட்ட காலமாகும். இக்காலத்துப் பல்லவர்கள், வைதீக சமயத்திற்குச் சார்பானவர்களாக விளங்கினர். முதல் ஆழ்வார்கள், தம் பாசுரங்களில் பிற தெய்வங்களைத் தாழ்த்தி திருமாலை உயர்வாகக் கூறும் நெறியைக் கையாண்டுள்ளார். பக்தி இயக்கத்தில் சைவமும் வைணவமும் இருந்தாலும், வைணவம் சைவத்தைத் தாக்கிப் பாடும்நிலை முதலாழ்வார்கள் காலத்திலேயே தோன்றி விட்டது.

**அவரவர் தாம்தாம் அறிந்த வாறேத்தி**
**இவரிவர் எம்பெருமா னென்று – சுவர்மிசைச்**
**சார்த்தியும் வைத்தும் தொழுமவர் உலகளந்த**
**மூர்த்தி யுருவே முதல் (முதல் திருவந்தாதி, பா.14)**

என்ற பொய்கை ஆழ்வாரின் பாடல் வரிகளில், பிற தெய்வங்களை விட திருமாலை உயர்த்தி கூறும் போக்கினை அறிய முடிகிறது. முதலாழ்வார்கள் தான் சார்ந்து இருக்கின்ற மதக்கடவுளரில், திருமாலை உயர்த்தியும் பிற தெய்வங்களைத் தாழ்த்தியும் கூறி,

 **ISBN Number: 978-81-963413-5-0**

சமயத் தொண்டாற்றியுள்ளமை புலனாகின்றது. முதலாழ்வார்கள் காலத்தில், பக்திக்கு முதன்மை கொடுத்ததால், பக்தியோடு தொடர்புடைய குலங்களை மட்டும் குறிப்பிட்டுள்ளனர். அதுவன்றி குலப் பாகுபாடுகளைப் பற்றிய கருத்தாக்கங்கள் இவர்களது பாடல்களில் காணப்படவில்லை.

**திருமழிசை ஆழ்வார்**

திருமழிசை ஆழ்வார், கி.பி 500 முதல் கி.பி.600 க்கு இடைப்பட்டக் காலத்தவர். பரம்பொருளின் தத்துவத்தை உணர்ந்திட, பல சமயக் கருத்துக்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில், சாக்கியம் மற்றும் சமணம் சமயக் கருத்துக்களை கற்றும் தெளிவு பிறக்காததால், சைவ சமயத்தில் சேர்ந்தார். திருமலையில் தங்கி இருந்த பொழுது பேயாழ்வாருடன் ஏற்பட்ட நட்பால் வைணவ சமயத்தில் சேர்ந்தார்.

தவத் தேவனாக விளங்கும் இறைவனைக் காணும் வழி, தவ வழி அல்ல என்றும், தவம் செய்வதற்கு ஆற்றல் இருந்தாலும் அதற்காக உடல் வருந்த வேண்டாம் என்றும் கூறி பிற சமயத்தின் தவக்கோட்பாட்டினை எதிர்த்ததை, **மெய்வருந்திக் கூடாக்கி நின்றுண்டு கொண்டு உழல் வீர்** (நான்முகன் திரு.அ, பா.5) என்ற அடிகள் எடுத்தியம்புகின்றன. மேலும், சமணர்களும் பௌத்தர்களும் சைவர்களும் திருமாலைத் துதிக்காததால்

 **ISBN Number: 978-81-963413-5-0**

ஈனப்பிறவிகளாக்கி விட்டனர் என்று இகழ்கின்றார். இத்தகைய அறிவுறுத்தல்கள் மூலமாக, மக்கள் மனதில் திருமாலின் மீது பக்தியை ஏற்படுத்த முனைந்துள்ளதை அறிய முடிகிறது. மேலும், *“தெய்வத்தன்மை இல்லாததும் பொல்லாத வடிவுடையதுமாகிய தெய்வங்களையும் திருமகள் உறையாத தெய்வத்தையும் தேவர்கள் என நினைக்க வேண்டாம்* (நான்முகன் திருவந்தாதி, பா.53) என அறிவுறுத்துவதன் மூலம் அத்தெய்வங்கள் எல்லாம் போலி தெய்வங்கள் என்ற ஆழ்வாரின் சிந்தனை வெளிப்படுகிறது.

திருமழிசைஆழ்வார் நான்கு சாதிகள் உண்டு என்பதைக் கூறி, திருமாலிடம் பக்தி கொண்டுள்ள ஒன்றையே குலமாகக் கொள்கிறார். *“திருமாலைத் தொழுவதன் பயனாக நல்ல குலத்தையேனும், தீய குலத்தையேனும் அடைவதாயின் அதுவே ஆகுக”* (நான்முகன் திரு. அ, பா.67) எனக் குலத்தைப் பற்றிக் கவலை கொள்ளாத நிலையை வெளிப்படுத்துகிறார். இதன் மூலம் திருமழிசை ஆழ்வாரின் அகச்சமய நெகழ்ச்சி அறிய முடிகிறது.

**திருப்பாணாழ்வார்**

திருப்பாணாழ்வாரின் காலம், கி.பி 500 முதல் கி.பி.600க்கு இடைப்பட்டதாகக் கருதலாம். இவர் சோழ

 **ISBN Number: 978-81-963413-5-0**

நாட்டிலுள்ள உறையூரில் பிறந்தார். பாணர் குலத்தைச் சார்ந்தவர்.

அரண்மனைகளிலும் ஊர்களிலும் பாடிப் பறந்து திரிந்த பாணர்களை, சைவ வைணவ மதங்கள் ஆட்கொண்டு, அவர்களுடைய தாழ்வு மனப் பான்மையைப் போக்கி மதக் கொள்கைகளைப் பரப்பும் பணிக்கு சேர்த்துக் கொண்டனர். பாணாழ்வாரும், நீலகண்ட யாழ்ப்பாணரும் இவ்வகையினர் ஆவர்.

திருப்பாணாழ்வாரின் பாடல்களில் புறச்சமயத் தாக்குதல் காணப்படவில்லை. குறைந்த சொற்களில் நிறைந்த பக்தியுணர்வைத் தூண்டும் பாடல்களை மட்டுமே பாடியுள்ளார். அக்காலத்தில் தீண்டத்தகாத சாதியினராகக் கருதப்பட்ட பாணர் குடியில் பிறந்த திருப்பாணாழ்வார், நீர் துறையிலிருந்து விலகிச் செல்ல கல்லால் அடிக்கப்பட்டு, அதன் பின் அவ்விடம் விட்டு நகர்ந்தார். அன்றிரவு அரங்கநாதன் சாரங்க முனிவர் கனவில் திருமால் தோன்றி, ஆழ்வார் உள்ளத்தில் தான் இருந்ததாகக் கூறினார். அன்றே சாரங்க முனி திருப்பாணாழ்வாரைத், தமது தோளில் சுமந்து கொண்டு திருக்கோவிலின் கருவறைக்குள் வந்ததாக வரலாறு கூறுகிறது. தீண்டத்தகாத குலத்தினரையும் இணைத்து, எல்லாக் குலமும் ஒரு குலம் என்ற ஒற்றுமையைப் பத்தி இயக்கங்கள் ஏற்படுத்தியதைப், பக்தி இலக்கியங்களில்

 **ISBN Number: 978-81-963413-5-0**

காணமுடிகிறது. **“அமலன் ஆதிபிரான் என்னை அடியார்க்கு ஆட்படுத்த விமலன்” (அமலனாதி, பா.1)** என்று திருப்பாணாழ்வார் தமது முதல் பாசுரத்தில் உரைப்பதன் மூலம், தாழ்ந்த குலத்தவர் என்று எண்ணாமல், திருமாலை நினைப்பவர் எல்லாம் ஒரே தொண்டர் குலம் என்ற கருத்தினை முன்வைக்கின்றார். வைணவ ஆழ்வார்கள் பன்னிருவரும் வேறுபட்டவர் ஆயினும், கொண்ட கோட்பாட்டால் அனைவரும் தொண்டர் குலத்தினர் ஆவர். இந்த உண்மை வெறும் கொள்கை அளவில் நின்றுவிடாது வாழ்வியலாக பக்தி காலத்தில் நிலவியுள்ளது என்பதனை அறிய முடிகிறது.

**தொண்டரடிப்பொடி ஆழ்வார்**

பக்தி இயக்கத்தில், வைணவ ஆழ்வார்களான திருமழிசை ஆழ்வார், தொண்டரடிப்பொடி ஆழ்வார், திருமங்கை ஆழ்வார், சைவ நாயன்மார்களில் திருஞானசம்பந்தரையும், திருநாவுக்கரசரையும் மற்றும் புறச்சமயங்களான சமண பௌத்த சமயங்களையும், எதிர்த்துப் பிரச்சாரம் செய்தவர்களில் குறிப் பிடத்தக்கவர்கள் ஆவார்கள். இவர் காலத்தில் சமயப் போட்டிகள் உச்சநிலையில் இருந்தன. அக்காலச் சூழலில் கண்டன குரல் எழுப்புவது ஒன்றே முக்கியமானதாக விளங்கியது.

**புலை அறம் ஆகிநின்ற புத்தொடு**

 **ISBN Number: 978-81-963413-5-0**

**சமணம் ஏலம் கலை அறக் கற்ற**

**மாந்தர் காண்பரோ? கேட்பரோ தாம்?**

**(திருமாலை, பா.7)**

என்ற பாடலில், சமண பௌத்த மதங்கள் போதிப்பவை புலையறம் என்று குறிப்பிட்டுக் கடுமையாகச் சாடி உள்ளார். திருமாலை நிந்தனை செய்வார்கள் என்றால், **"தலை அறுப்பு உண்டும் சாவேன்...." (திருமாலை, பா.7)** என்று அவர் கூறுவதன் மூலம், திருமால் மீது தொண்டரடிப்பொடி ஆழ்வார் கொண்டிருந்த அன்பையும் பக்தியையும் அறிய முடிகிறது. திருமாலைத் தவிர சரணமாகக் கூடிய வேறொரு தெய்வம் இல்லை என்பதை உணரும்படி தமது பாசுரங்கள்வழி வேண்டுகின்றார்.

அகச்சமய நெகழ்ச்சியாக தொண்டரடிப்பொடி ஆழ்வார் தம் பாடலில், நான்கு வேதங்களையும் ஓதுபவர்களுக்கு

**இழிகுலத்தவர்களேனும் எம்**

**அடியார்கள் ஆகில் தொழுமின் நீர்,**

**கொடுமின், கொள்மின்... (திருமாலை, பா.42)**

என்று திருமாலே கூறியதாகத் தெரிவிக்கின்றார். இதனால் திருமால் அடியவர்கள் மூலமாக, சாதி என்பது ஒழிந்து திருமாலுக்குச் சமமானவர் என்ற நிலை செயல்பட வேண்டும் என்ற கொள்கையை அவர் வலியுறுத்தியுள்ளமை அறிய முடிகிறது. மேலும், ஆழ்வார்

 **ISBN Number: 978-81-963413-5-0**

தம் பாசுரத்தின் மூலம், *“உயர்ந்த குடியில் பிறந்திருந்தாலும் திருமாலை பக்தி செய்யவில்லையானால், அவர்களை அவர் விரும்ப மாட்டார் என்றும் அதே நேரத்தில் இழிந்த குலத்தில் பிறந்திருந்தும் திருமால் திருவடிகளில் பக்தி செய்தால் அவரை விரும்புவார்”* (திருமாலை, பா. 39) என்று தெரிவித்துள்ளார். இதன் மூலம் பிறப்பால் ஏற்பட்டுள்ள சாதி வேற்றுமை ஒழிய வேண்டும் என்ற ஆழ்வாரின் நோக்கம் புலனாகின்றது.

**திருமங்கை ஆழ்வார்**

சோழ நாட்டைச் சார்ந்த திருமங்கை மன்னராவார். கி.பி 650 முதல் கி.பி 750க்கு இடைப்பட்டக் காலத்தவர். தாம் மன்னர் என்கிற முறையிலும், தாம் சார்ந்துள்ள வைணவத்தை வளர்க்கும் நோக்கிலும், சோழ மற்றும் பாண்டிய மன்னர்களுடமன் ஆதரவும் நட்பும் பெற்றிருந்ததால், வைணவம் மதிப்புடனும் செவ்வாக்குடனும் திகழ்ந்தது. சமண பௌத்த மதத்தலைவர்களின் பண்பாடு, ஒழுக்கம், நடை, உடை, உணவு, பேச்சு, அறிவுத்திறன் ஆகியவற்றைத் தம் பாடல்களில் சாடி, பிற சமயக் கண்டனத்தைப் புலப்படுத்தியுள்ளார். அவர்கள் *“வெறும் தர்க்கத்தையே கொண்டு, தம்மதத்தை நிலை நாட்டுவர்; தயிர் சோற்றைத் தொண்டை பிதுங்கும்படி உண்பர்”* (பெரிய திருவந்தாதி,


**ISBN Number: 978-81-963413-5-0**

பா. 2: 1-7) என நகையாடி உள்ளார். இவர்களுடைய சொல்லையும் செயலையும் நம்ப வேண்டாம் என்று மக்களுக்கு எச்சரிக்கைச் செய்கின்றார். வானவரும் தானவரும் போற்றி புகழும் வேங்கடவனுக்கே, மக்கள் அடிமை தொழில் பூண்டிட வேண்டுவதை இவர் பாடல்களில் காண முடிகிறது. திருமங்கை ஆழ்வாரின் காலத்தில் பல வகையான சாதிகள் இருந்தன. எனினும் இவர், தொண்டர் குலத்தவரையே குலமாகச் சொல்கிறார். ராமன் குகனிடம் ஏற்றத்தாழ்வு பாராது அன்புள்ளத்துடன் நடந்து கொண்ட காட்சிகளை எடுத்தியம்புவது மூலம், சாதியக் கொடுமைகளின் பிடியிலிருந்தும், வர்க்க வேதங்களிலிருந்தும் ஆழ்வார்கள் விலகி நின்று, சமுதாயப்பணி செய்து பக்தி மார்க்கத்தை வளர்த்துள்ளதை அறிய முடிகிறது.

**குலசேகர ஆழ்வார்**

சோழநாட்டில் மன்னர் குலத்தில் பிறந்த இவர், கி.பி 650 முதல் கி.பி 750க்கு இடைப்பட்டக் காலத்தவர். இவரது ஆட்சியின் போது, சோழனையும் பாண்டியனையும் வென்ற சிறப்புடையவர். இவர் திருமாலின் மீது கொண்ட பக்தியினால், **“கொல்லி நகர்க்கிறை கடல் கோமான் குலசேகரன்” (**பெருமாள் திருமொழி, பா. 4: 6: 3), **“கொல்லி காவலன் மாலடி முடிமேல் கோலமாம் குலசேகரன்”** ‘பெருமாள் திருமொழி,

 **ISBN Number: 978-81-963413-5-0**

பா. 4: 6: 1) என்றும் தம்மைக் குறிப்பிடுகிறார். இவர் பதவிப் பெருமை இல்லாது, திருமால் பக்தியில் மூழ்கித் திளைத்த ஆழ்வாராவார்.

பல நூல் புலமைப்பற்ற குலசேகர ஆழ்வார், இராமாயணத்தில் மிக்க ஈடுபாடு உடையவராக விளங்கினார். இவர் காலத்தில் சமண பௌத்த மதங்கள் வீழ்ச்சியுடன் இருந்தால் புற சமயத்தை கண்டித்து ஓர் இடத்தில் கூட கூறவில்லை. இவர் பாடல்களில் திருமால் மேல் கொண்ட பக்தியும், பாகவதர்பால் கொண்ட அளவில்லாத நேசமும் புலனாகிறது. இராம பக்தியில் திளைத்தவரான குலசேகர ஆழ்வார், ஆயர், அந்தணர், அரசர், தொண்டர் குலம் ஆகிய குலங்களைப் பலவிடங்களில் அவர்தம் பாடல்களில் குறிப்பிட்டிருந்தாலும், தொண்டர் குலமாகிய வைஷ்ணவர்கள் இடையேயே ஆழ்வார் மனம் பெரிதும் மயங்கிக் கிடப்பதைக் காண முடிகிறது. திருமாலை வழிபடுவது மட்டுமே குலசேகர ஆழ்வார் அறிந்த குலமாக இருந்துள்ளமை உணர முடிகிறது.

**பெரியாழ்வார்**

பெரியாழ்வார் பாண்டிய நாட்டில், கி.பி.700 முதல் கி.பி.775க்கு இடைப்பட்ட காலங்களில் வாழ்ந்தவர். இவர் 85 ஆண்டுகள் வரை வாழ்ந்தார் எனக் கருதுவர். பராந்தக நெடுஞ்செழியன், பெரியாழ்வாரைத் தமது சமயக்

 **ISBN Number: 978-81-963413-5-0**

குருவாக ஏற்றுக் கொண்டதால், அரசியல் அரவணைப்பில் வைணவத்தை மிக்க எழுச்சியுடன் திகழச் செய்தார் எனலாம். இவர் தமது பாசுரங்களில், சமண பௌத்த மதங்களைப் பற்றிக் குறிப்பிடவில்லை. பிற தெய்வங்களைத் தாழ்த்தி குறிப்பிடவில்லை என்றாலும், அவற்றிடம் பற்று கொண்ட மக்களைச் சாடுகின்றார். பிற சமயத்தினர் சமுதாயத்தில் நலிந்த பிரிவினரின் வறுமையைப் பயன்படுத்திப் பொருள்கள் கொடுத்து, அவர்களது தெய்வப் பெயர்களை இடுமாறு செய்தனர். அந்நிலையில்,

**உச்சியில் எண்ணையும் சுட்டியும் வளையும் உகந்து**
**எச்சம் பொலிந்தீர்காள் என் செய்வான் பிறர்பேரிட்டீர்**
**பிச்சைபுக்கு ஆகிலும் எம்பிரான் திருநாமமே**
**நச்சுமின் நாரணன் தன அன்னை நரகம் புகாள்**
**(பெரியாழ்வார் திருவந்தாதி, பா.4:6:3)**

என்று தமது பாசுரம்மூலம் மக்களிடம் திருமால் நெறியை வளர்க்கின்றார்.

பெரியாழ்வார் பல குலங்களைப் பற்றிய கருத்துக்களை வெளியிட்டாலும், நாராயணனை வழிபடாத மானிட ஜாதியையே வெறுக்கின்றார். ஆயர் குலத்தைப் பற்றிக் குறிப்பிட்டாலும் மற்ற


**ISBN Number: 978-81-963413-5-0**

ஆழ்வார்களிலிருந்து வேறுபட்டு கண்ணன், ***“ஆயர்புத்திரன் அல்லன் அருந்தெய்வம்”*** (திருப்பல்லாண்டு, பா. 7) என்று தெளிவாகத் தெரிவித்துள்ளார். சாதி நம்பிக்கையை ஒழித்து தெய்வமாகிய பெருமாளின் பெயரையே இடுமாறு அறிவுறுத்துவதால், ஒன்றேகுலம் ஒருவனேதேவன் என்ற வழிமுறையை பெரியாழ்வார் கடைப்பிடிக்க முயன்றுள்ளமை உணர முடிகிறது.

**ஆண்டாள்**

பாண்டிய நாட்டு ஸ்ரீவில்லிபுத்தூரில், பெரியாழ்வாரின் வளர்ப்பு மகளாக வாழ்ந்த கோதை கி.பி.716 முதல் கி.பி.732க்கு இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்தவர் ஆவார். தந்தையின் பக்தி, மகளையும் திருமாலின் வழிபாட்டில் ஈடுபட்டுப் திளைக்கச் செய்தது. திருமாலால் ஆட்கொள்ளப்பட்டமையால் ‘ஆண்டாள்’ என்று அழைக்கப்பட்டார். இவர் காலத்தில் வைணவம், சமண பௌத்த வீழ்ச்சிக்குப்பின் சிறப்புற்று இருந்தமையாலும், திருமாலன்றிப் பிற தெய்வச்சிந்தனை இல்லாமையாலும், வேறெந்த தெய்வங்களைப் பற்றியும் அவரது பாடல்களில் குறிப்பிட்டுப் பேசவில்லை. திருமால் பக்தியை எண்ணமாகக் கொண்டதால், சாதியைப் பற்றிய அகச்சமய நெழ்ச்சியும் இவரது பாடல்களில் காணப்படவில்லை.

 **ISBN Number: 978-81-963413-5-0**

**நம்மாழ்வார்**

பாண்டியநாட்டில், குருகூர் என்று அழைக்கப்பட்ட ஆழ்வார் திருநகரியில் கி.பி.700 முதல் கி.பி.700க்கு இடைப்பட்டக் காலத்தில் வாழ்ந்தவர் ஆவார். இவர் வாழ்ந்த காலத்தில் சமணமும் பௌத்தமும் வீசியுற்றிருந்தாலும், சமுதாயத்தில் புறச் சமயத்தார்கள் இருந்தார்கள். இதனை நம்மாழ்வாரின் திருவாய் மொழியும், திருவிருத்தமும் அறிவிக்கின்றன.

**வணங்கும் துறைகள் பலபலவாக்கி மதிவிகற்பால்**
**பிணங்கும் சமயம் பலபலவாக்கி**
**அவைஅவைதோறு**
**அணங்கும் பலபலவாக்கி நின்மூர்த்தி**
**பரப்பிவைத்தாய் (திருவிருத்தம், பா. 96)**

என்ற பாசுரத்தில், சமணம், பௌத்தம், சைவம் மற்றும் பிற சமயத்திற்கெல்லாம், காரணகர்த்தா திருமாலே என்று குறிப்பிட்டுள்ளதை அறிய முடிகிறது.

**பிணக்குஅற அறுவகைச் சமயமும்**
**நெறி உள்ளி உரைத்த**
**கணக்கு அறு நலத்தனன் (திருவாய்மொழி, பா. 1: 3: 5)**

என்ற வரிகளில், வைதீக நெறியில் தங்களது தெய்வமே முழுமுதல் என்று உயர்த்திப் பேசும் பொழுது அவர்களுக்குள் பிணக்கு ஏற்படலாயிற்று என்றும், இந்தப்


**ISBN Number: 978-81-963413-5-0**

பிணக்கை அறுத்து வேதமார்க்கத்தை காட்டிய முடிவில்லாத முதல்வனாகத் திருமால் திகழ்வதாகவும் குறிப்பிடுகின்றார். நம்மாழ்வாரும் மற்ற ஆழ்வார்களைப் போலவே அரசர்,அந்தணர், ஆயர், கூத்தர் அசுரர், முழவு அடிப்போர், தேவர்குலம், கீழான மானிட ஜாதி போன்ற குலங்களைக் காட்டினாலும், தொண்டர் குலத்தையே பெரிதாக மதித்து அவர்களையே தெய்வமாகக் கொள்கிறார். மானிட சாதியைக் கீழான சாதி என்றே மதிப்பிட்டுள்ளார். எல்லாவற்றிற்கும் மேலானதாக தொண்டர் குலத்தை மதிப்பதால் சாதியற்ற சமுதாயத்தை உருவாக்க அவர் உள்ளம் விழைந்துள்ளதை உணரலாம்.

**மதுரகவி ஆழ்வார்**

ஆழ்வார்களில் கடைசி ஆழ்வார் ஆனவர். இவர் நம்மாழ்வாரை சந்தித்து, அவரையே தெய்வமாகக் கொண்டு வாழ்ந்தவர். ஆதலால் அவரை நம்மாழ்வாரின் சமகாலமான கி.பி.750 முதல் கி.பி.805க்கு இடைப்பட்ட காலத்தவராகக் கொள்வர். இவர் வைணவப் பற்றாளராக விளங்கி, நம்மாழ்வாரைத் தெய்வமாகக் கொண்டதால், புறச் சமயங்களைத் தாழ்த்தியோ, அகச்சமய நெகிழ்ச்சியோ இவரது பாடல்களில் காணப்படவில்லை.

**முடிவுரை**

பக்தி இயக்க உணர்வினால் ஆழ்வார்கள் பிற சமயங்களைத் தாக்கித், தம் பாசுரங்களின் மூலமாகக்


**ISBN Number: 978-81-963413-5-0**

கண்டனக் குரல் எழுப்பி அவற்றை வீழ்த்தி திருமால்நெறியாம் வைணவ மதத்தை வளர்ச்சி பெறச்செய்ததாலும், சமுதாயத்தில் நிலவும் வேதங்களைப் பொருட்படுத்தாது அகச்சமய நெகிழ்ச்சியோடு நாராயணனை வழிபடுவோரெல்லாம் நம்மவர் என்று ஆழ்வார்கள் வாழ்ந்து காட்டியதாலும், பக்தி இயக்கம் வலுப்பெற்றது என்பதை இவ்வாய்வு முடிவாக கொள்கிறது.

**துணை நூற்பட்டியல்**


[1] ஆச்சார்யா, பி. ஸ்ரீ. *நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழி*. அல்லயன்ஸ் பதிப்பகம், மயிலாப்பூர், சென்னை.

[2] ஆனந்தி, ந. முனைவர். *பெருமாள் திருமொழி மூலமும் உரையும்*. பதிப்பாண்டு - 2010, ராமையா பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை.

[3] கிருஷ்ணசுவாமி அய்யங்கார் (ப.ஆ). *நான்முகன் திருவந்தாதி வ்யாக்யானம்*. பதிப்பு ஆண்டு – 1998, ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீ வெளியீடுகள், திருச்சி.

[4] கிருஷ்ணசுவாமி அய்யங்கார் (ப.ஆ). *முதல் திருவந்தாதி*. பதிப்பு ஆண்டு – 1962, ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீ வெளியீடுகள், திருச்சி.


 **ISBN Number: 978-81-963413-5-0**

[5] சுவீரா ஜெயஸ்வால் (ஆ), பார்த்தசாரதி. ஆர். (தமிழில்), *வைணவத்தின் தோற்றமும் வளர்ச்சியும்.* பதிப்பாண்டு – 2010, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், திருநெல்வேலி.

[6] பழனியப்பன். பழ. பள்ளத்தூர் (உ.ஆ). *நாலாயிரத் திவ்ய பிரபந்தம் பெரியாழ்வார் திருமொழி.* பதிப்பு ஆண்டு – 2019, திருவரசு புத்தக நிலையம், சென்னை.

[7] பழனியப்பன். பழ. பள்ளத்தூர் (உ.ஆ). *திருமாலை திருப்பள்ளி எழுச்சி.* அமலன் *ஆதிபிரான் கண்ணிநுண் சிறுதாம்பு.* பதிப்பு ஆண்டு – 2019, திருவரசு புத்தக நிலையம், சென்னை.

[8] பழனியப்பன். பழ. பள்ளத்தூர் (உ.ஆ). *நாலாயிரத் திவ்ய பிரபந்தம் திருமங்கை ஆழ்வார் பெரிய திருமொழி* பகுதி -1. பதிப்பு ஆண்டு – 2019, திருவரசு புத்தக நிலையம், சென்னை.

[9] பழனியப்பன். பழ. பள்ளத்தூர் (உ.ஆ). *நாலாயிரத் திவ்ய பிரபந்தம் நம்மாழ்வார் திருவிருத்தம் திருவாசிரியம் பெரிய திருவந்தாதி.* பதிப்பு ஆண்டு – 2019, திருவரசு புத்தக நிலையம், சென்னை.

[10] ஜெகத்ரட்சகன். எஸ். முனைவர் (ப.ஆ). *திருப்பல்லாண்டு வ்யாக்யானம்.* ஆழ்வார்கள் ஆய்வு மையம் வெளியீடு, திலக் தெரு, சென்னை.

 **ISBN Number: 978-81-963413-5-0**